# உள்ளாட்சி அரசாங்கப் பிரதிநிதிகளின் குரல்

திருவாரூர் மாவட்ட ஊராட்சித் தலைவர்களுக்கான பயிற்சி மற்றும் மாநாடு 4.8.2012





கடலூர் மாவட்ட
ஊராட்சித் தலைவர்களுக்கான
பயிற்சி மற்றும் மாநாடு, 13.8.2012

13.8.2012 அன்று நடைபெற்ற
கடலூர் மாவட்ட
ஊராட்சித் தலைவர்களுக்கான
பயிற்சி மற்றும் மாநாட்டில் கருத்தாளர்கள்
கருத்து சாதனங்களை வெளியிடுகின்றனர்.



*ஏற்பாடு*

**தமிழக ஊராட்சி அரசாங்க பெண் தலைவர்கள் கூட்டமைப்பு**
**தமிழ்நாடு ஊராட்சித் தலைவர்கள் கூட்டமைப்புகளின் சம்மேளனம்**
**தமிழ்நாடு தலித் உள்ளாட்சி மன்ற தலைவர்கள் கூட்டமைப்பு**

# மாபெரும் கிரானைட் கொள்ளை

– எஸ். துரைராஜ்

முந்தைய மாவட்ட ஆட்சியரின் ஒரு கடிதம் தமிழ்நாட்டின் அரசியல் பலமுள்ளவர்களின் கிரானைட் கொள்ளை பற்றிய சட்டத்துக்கு புறம்பான செயல்களை பற்றிய விவரங்களை வெளிப்படுத்தி இருக்கிறது.

மதுரையை சுற்றியுள்ள இடங்களில் கிரானைட் கொள்ளை கும்பல் இயற்கை வளங்களை கடந்த பத்தாண்டுகளாக வெளிப்படையாகவே சுரண்டி தின்று வந்திருக்கின்றது. ஆனால், அரசாங்கமோ மிகத் தாமதமாகவே செயல்படத் துவங்கி இருக்கிறது. அதிலும் கடிதம் பற்றிய செய்திகள் கசியத் துவங்கிய பின்புதான்.

மே 15ம் தேதி மாநில தொழில்துறை செயலருக்கு மாவட்ட ஆட்சியர் சகாயம் எழுதிய கடிதத்தையொட்டி அரசியலில் பலம் வாய்ந்தவர்களின் கை கோர்ப்புடன் நடத்தி வந்த மாபெரும் கிரானைட் கொள்ளையர்களின் மேல் அரசாங்கத்தின் சாட்டையடி பாயத்துவங்கி இருக்கிறது; இருபது ஆண்டுகளாக தமிழ்நாட்டின் இயற்கை வளங்களை சீரழித்த பின்பு அதுவும் முன்னாள் மாவட்ட ஆட்சியரின் கடிதம் வெளியான பின்புதான் இது கொஞ்சம் வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது. அவரின் கடிதம் கடலின் உள்ளே உள்ள பனிகட்டி மலையின் முகடு சிறிதளவு மேலே தெரிவது போலத்தான் என்கிறார்கள் (பிற மாவட்டங்களில் நடக்கும் கொள்ளைகளோடு ஒப்பிடும்போது) விவரம் தெரிந்த வட்டாரங்கள் சொல்வது என்னவென்றால் மதுரை மாவட்டத்தில் மட்டுமே இந்த செயல்களால் விளைந்த அரசாங்கத்தின் வரி இழப்பு மட்டுமே ரூ. 35000 கோடிக்குமேல் என்று சொல்கின்றன.

தற்போதைய பொருளாதாரக் கொள்கையின் காரணமாக கொள்ளையடிப்பது வசதியாகப் போய்விட்டதோடு பலம் வாய்ந்த இந்த கொள்ளை கும்பல் சட்ட திட்டங்களின் விதிமுறைகளை தங்கள் வசதிக்கேற்ப பயன்படுத்திக் கொள்கின்றன. தங்கள் தேவைக்கேற்ப அரசு நிலங்கள், புறம்போக்கு நிலங்கள், பஞ்சமி நிலங்கள் (தலித்துகளுக்கானது) மற்றும் தனியார் நிலங்களை பறித்துக் கொள்வதோடு மழைநீர் வரத்துக் கால்வாய்களையும் மழைநீர் தேங்கும் குட்டைகளையும் பயன்படுத்திக் கொள்வதோடு கலாச்சார மற்றும் தொல்பொருள் முக்கியவத்துவம் வாய்ந்த இடங்களையும் விட்டு வைக்கவில்லை. இவர்கள் எல்லைக் கற்களை கூட பிடுங்கிப் போட தயங்குவதில்லை.

இந்தப் பிரச்சனை பற்றி சமூகச் செயல்பாட்டாளர்கள், சுற்றுச் சூழலியல் நிபுணர்கள் மற்றும் அரசுசாரா தொண்டு நிறுவனங்களால் மற்றும் இடதுசாரி கட்சிகளால் சுட்டிக் காட்டப்பட்டு வந்துள்ளன. முதலமைச்சர் ஜெயலலிதா தன் கட்சிப் பிரச்சாரத்துக்காக கடந்த ஆண்டு வந்தபோது கூட இந்த வரியிழப்பு கல்குவாரிகளால் நடத்தப்பட்டு வந்ததை குறிப்பிட்டுப் பேசினார். தான் ஆட்சிக்கு வந்தால் இதன்மீது நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதி அளித்தார்.

ஆனால், ஆட்சிக்கு வந்த பிறகு முந்தைய திமுக ஆட்சி அசையாமல் கல்லாக இருந்தது போலவே மே 16, 2011ல் ஆட்சிக்கு வந்த புதிய ஆட்சியும் எந்தவித செயல்பாடும் செய்யாதிருக்கிறது. ஆனால் குண்டு வெடிப்பாக வந்த கடிதம் செயல்பாட்டுக்கு வழிவகுத்துவிட்டது. ஆகஸ்ட் 10ம் தேதியன்று சென்னையில் அமைச்சர்களோடு மற்றும் கிரானைட் சம்மந்தப்பட்ட அதிகாரிகளோடு பேச்சுவார்த்தை நடத்தி விவாதிக்க வைத்தது.

மே 19ம் தேதியன்று மாவட்ட ஆட்சியர் தன் கடிதத்தை அனுப்பினார். நான்கு நாட்கள் கழிந்ததும் அவர் கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறைக்கு சிறப்பு அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநராக மாறுதல் செய்யப்பட்டார். அவர் கடிதம் பற்றிய செய்தி ஆகஸ்ட் 1ம் தேதி கசியத் தொடங்கியது.

மதுரை மாவட்டத்திலுள்ள மேலூர் தாலுக்காவில் நடக்கும் ‘‘சட்டத்துக்குப் புறம்பான’’ கிரானைட் தொழில் காரணமாக அரசாங்கத்துக்கு வரியிழப்பு காரணமாக ரூ.15000 கோடி இழப்பு நேர்ந்திருக்கலாம் என்றும் மூன்று பெரிய கிரானைட் தொழிலகங்கள் பற்றியும் சகாயம் தன் கடிதத்தில் சுட்டிக்காட்டி இருந்தார். அவர் குறிப்பிட்டிருந்து மூன்று தொழிலகங்களாவன; பி.ஆர்.பி. ஏற்றுமதி, ஒலிம்பஸ் கிரானைட்ஸ்ட் மற்றும் சிந்து கிரானைட் என்பனவாகும்.

அந்த கடிதம் எப்படி விவசாயிகளும் கிராமத்தார்களும் தங்கள் வாழ்வாதாரங்களை இழந்து போகின்றனர். இந்த கிரானைட் கம்பெனிகள் அவர்களை அந்த நிலைமைக்கு தள்ளுவதோடு கொள்ளையினை தொடர்ந்து பல்லாண்டுகளாகச் செய்து வருகின்றன என்பதையும் வெளிச்சம் போட்டு காட்டியது. இந்த கொள்ளை கம்பெனிகள் அதிகாரிகளை எப்படி தம் கைக்குள் வைத்துக் கொண்டு வந்திருக்கின்றன என்றும் விளக்கியிருந்தார். மேலும் இந்த சட்டத்திலுள்ள ஓட்டைகளை அடைப்பதற்கான வழிமுறைகளும் கூறப்பட்டிருந்தன. நேர்மையான அதிகாரிகளை வைத்து ஒரு மாதத்தில் அறிவியல் ரீதியாக புள்ளி விவரம் எடுப்பது பற்றியும் ஒன்பது வழித்திட்டத்தில் கூறப்பட்டிருந்தது. குவாரி நடத்துபவர்கள் நேரடியாக பணம் செலுத்த நிர்பந்திப்பது; கட்டத் தவறுபவர்களின் உரிமத்தை ரத்து செய்வது போன்றவை குறிப்பிடப்பட்டிருந்தது. தமிழ்நாடு கனிம வளத்துறையின் விற்பனை திட்டத்தை கைவிடுவது போன்ற பல திட்டங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.

தமிழ் தினசரியான தினபூமியிடமிருந்து வந்திருந்த புகாரை அடுத்து சகாயம் ஏப்ரல் மூன்றாம் தேதியன்று ஆழமான புள்ளிவிவர கணக்கெடுப்பு மற்றும் சர்வே போன்றவைகளை இந்த குவாரிகள் மீது மேற்கொள்ள உத்தரவிட்டிருந்தார். சட்டத்துக்கு புறம்பான முறையில் குறிப்பிடப்பட்டிருந்த மூன்று தொழிலகங்கள் குவாரிப் பணி செய்திருந்ததால் அரசுக்கு 23.42 கோடி வரியிழப்பு நேர்ந்துள்ளதை அக்கடிதம் சுட்டிக்காட்டியிருந்தது.

மேலும் ரூ.16,338 கோடி வரியிழப்பு அரசுக்கு நேர்ந்திருக்க வேண்டும். அரசுப் புறம்போக்கு நிலத்தில் மற்றும் கீழ வளவு, கீழையூர், E.மல்லம்பட்டி, செம்மணிப்பட்டி கிராமங்களுக்கு செல்லும் வண்டிப் பாதைகளின் ஆக்கிரமிப்பு போன்றவற்றால் என்று மேலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அறிவியல் பூர்வமான சர்வே மற்றும் மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டால் மேலூர் தாலுக்காவில் மட்டுமே 100 சதவீத வரி உயர்வுக்கு வழி இருக்கிறதென்றும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

மேலும் தமிழ்நாடு கனிம வளம் ஆலையான தாமின் இடமிருந்தே 8,37500 கன அடி கொண்ட கிரானைட் கற்கள் சட்டத்துக்கு புறம்பாக குவாரிகளில் இருந்து கொண்டு செல்லப்பட்டுள்ளன. இவற்றின் மதிப்பு ரூ.3,350 கோடி என்றும் இக்கடிதம் சுட்டிக்காட்டுகின்றது. இங்கிருந்து தனியார் கிரானைட் சேமிப்புக் கிடங்கிற்கு கிரானைட் கற்கள் எடுத்துச் செல்வதை காட்டும் வீடியோ படங்கள் சாட்சியங்களாக அரசுக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ளன.

அரசு அதிகாரிகள் மாவட்ட ஆட்சியரால் அனுப்பப்பட்டு மேற்பார்வை செய்ததோடு தானே நேரடியாகப் பார்வையிட்டு உறுதி செய்து கொண்டதையும் சகாயம் தன் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். சட்டபூர்வமாக இல்லாமல் சுரங்க வேலைகள் நடைபெறுவதும் அதை இந்த கம்பெனிகள் நடத்துவதும் தெரியவந்துள்ளது. இதை நடத்துவதை தடுத்து நிறுத்த தவறிய வருவாய்துறை மற்றும் சுரங்க துறை அதிகாரிகளையும் கண்டித்ததையும் குறிப்பிட்டிருந்தார்.

பலருடைய வாழ்வாதாரங்களை இழக்க வைத்து குளம் குட்டைகளை எல்லாம் தம்முடைய தனியார் கம்பெனிகளின் சேமிப்புக் கிடங்காக மாற்றிவிட்டார்கள். இப்படி நீர் ஆதார வளங்களை பணி ஒழிப்பு செய்ததின் மூலம் விவசாயிகள் தம் விவசாயத்தை குறைத்துக் கொண்டதோடு கால்நடைகள் எண்ணிக்கையும் குறைந்துக் கொண்டே வந்துவிட்டதை அக்கடிதம் குறிப்பிட்டிருந்தது.

இதுபோன்ற ஆக்கிரமிப்புகளுக்கு விவசாயிகள் ஆரம்பத்தில் அதிக போராட்டங்களை தொடக்கத்தில் காட்டிய விவசாயிகள் நாளாவட்டத்தில் தங்கள் எதிர்ப்பை காட்ட முடியாமல் பலமிழந்தனர். கிரானைட் சாம்ராஜ்யத்தினர் எதிரில் நிற்க முடியாமல் பயம் கொண்ட இவர்கள் அமைதி அடைந்துவிட்டனர். விவசாயத்தை அடிப்படையாய் கொண்ட தன்னிறைவு கிராமப் பொருளாதாரம் மௌனச் சாவை தழுவிக் கொண்டது. இதற்கு காரணமான கிரானைட் கம்பெனிகளோ பணம் பலம் மற்றும் ஆள் பலம் இவைகளில் இராட்சச வளர்ச்சி கண்டு கொண்டது.

துறை சார்ந்த அலுவலர்கள் கிராமத்துப் புகார்களை கண்டுகொள்ளவோ எந்த ஒரு நடவடிக்கைகளோ எடுக்கவில்லை. அது பயத்தின் காரணமாக ஒன்று. இரண்டாவது அவர்கள் பெறும் சில பயன்களின் காரணமாக. மேற்பார்வை மேற்கொள்வது பற்றிய செய்திகள் முன்னரே கிரானைட் முதலாளிகளுக்கு தெரிய ஆரம்பித்துவிடும்.

குவாரி முதலாளிகளின் அரசியல் செல்வாக்கு காரணமாக முக்கியத்துவம் நிறைந்த பிரச்சனையாக உருவாகி இருந்தது. பி.ஆர்.பி. குழுமம் உரிமையாளர் பி.ஆர். பழனிச்சாமியின் கிரானைட் கம்பெனி நாட்டின் கிரானைட் கம்பெனிகளில் முன்னணியாய் இருந்தது. 'ஆட்சியாளர்களிடம் ''நல்ல உறவை'' இந்த கம்பெனி நிலைநாட்டி சட்டத்துக்கு புறம்பான செயல்பாடுகளை செய்து வந்தது. இதன்மீது புகார் அளித்தவர்கள் மீதே வழக்குப் பதிவு செய்தனர் காவல் துறையினர்.

விசித்திரமாக எல்லா பெரிய கட்சிகள் யாவும் அதிமுக, திமுக, காங்கிரஸ் உட்பட்ட அனைத்தும் இப்பிரச்சனை குறித்து அமைதியாகவே இருந்தன. மத்திய புலனாய்வு துறையின் தலையீடு வேண்டும் என்னும் கோரிக்கையோடு தன் பணியை நிறுத்திக் கொண்டது பாட்டாளி மக்கள் கட்சி.

ஆனால், பொதுவுடைமைக் கட்சியான கம்யூனிஸ்ட் கட்சி மட்டும் இந்தப் பிரச்சனையை முன்னெடுத்து ஆர்ப்பாட்டம் மட்டும் போராட்டம் நடத்தியது (CBI) விசாரணை கோரியது. மேலும், அக்கட்சி சட்டபூர்வமற்ற சுரங்கச் செயல்பாடுகள் பற்றியும் வாழ்வாதாரங்கள் அழிவு பற்றியும் தாமே சர்வே ஒன்றை நடத்தியது.

சட்டத்துக்கு எதிரான இதுபோன்ற சுரங்க நடவடிக்கைகளால் அரசுக்கு வரியிழப்பு ரூ.35000 கோடி ஆகும். மாநிலக் குழுவின் செயலர் ஜி. ராமகிருஷ்ணன் சென்னதாவது 14 குளங்கள் மற்றும் 13 பாசனக் கால்வாய்கள் இவர்களால் சீரழிக்கப்பட்டது, என்கிறார். அவருடைய கூற்றுப்படி மதுரை மாவட்டத்தில் 35 கிராமங்கள் இந்த வகையில் சுற்றுச் சூழல் பாதிக்கப்பட்டுள்ளது. சகாயத்தை பாராட்டிப் பேசிய ராமகிருஷ்ணன், ஏன் சகாயத்தை திடீரென்று மாற்ற வேண்டும். அவருடைய கடிதம் பற்றி வெளியே தெரியும் வரை தமிழக அரசாங்கம் ஏன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கேட்கிறார். இதற்கு முந்தைய ஆட்சியிலிருந்த முதலமைச்சர் கருணாநிதியும் ஏன் அமைதியாகயிருந்தார் என்று கேட்கிறார்.

மேலூர் தாலுக்காவின் பல கிராமங்களில் சகாயம் கூறுவதுபோல இது பெரும் பிரச்சனைதான் என்று பல அதிகாரிகள், விவசாய சங்கத்தினர்கள், தொழிற்சங்க உறுப்பினர்கள், தகவல் பெறும் உரிமைச்சட்ட செயலாளர்கள், அரசு சாரா தொண்டு நிறுவனத்தினர் என பலரும் இதையே கூறுகிறார்கள்.

கே. விஜயன், Tamin–ன் ஊழியர் சங்கத் தலைவர் இதுபற்றிக் கூறும்போது, மாநில அளவில் இந்த முகமை 1978ல் M.G.ராமசந்திரன் முதலமைச்சராய் இருந்தபோது அமைக்கப்பட்டதென்றும் சுரங்கத் தொழில் நுட்பத்தை மேம்படுத்தவும், அதன் செயல்பாடுகளை ஒரு கட்டுக் கோப்புக்குள் கொண்டு வரவும் கிராமப்புற வேலை வாய்ப்பை விரிவுபடுத்தவுமான நல்ல நோக்கங்களோடு Tamin–க்கு நல்ல தரமான கிரானைட் குவாரிக் கொண்ட குவாரிகள் இருக்கின்றன. தனியார் இத்தொழிலில் நுழைவதற்கு அனுமதி அளித்த காரணம் தமிழகத்தின் பல பகுதிகளில் செயல்படவும் நுணுக்கமான கருவிகளை தம்மால் வாங்கிடக் கட்டுபடியாகாதென்றும்தான். 1990ம் வருடங்களில் ஒப்பந்த முறை அரசாங்கத் தொழிலில் கொண்டுவரப்பட்டது. இது பல இடங்களில் அரசுக்கு சொந்தமான குவாரிகளில் இருந்து தனியார் சேமிப்பு கிடங்குகளுக்கு கிரானைட் கற்களை கடத்திச் செல்ல வழி வகுத்துவிட்டது. ஒப்பந்தக்காரர்கள் தமக்குச் சொந்தமாக குவாரிகளை பக்கத்திலேயே வைத்திருந்தார்கள்; இது விதிமுறைகளுக்கு எதிரானதாகும்.

கிரானைட் சொத்து மிகுந்த ஒரு மாநிலத்தில் இதற்கான மசோதா 2009ம் ஆண்டு கொண்டுவரப்பட்டபோது இதுபற்றி எழுந்த எதிர்ப்புக் குரல்களை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவேயில்லை.

தகவல் பெறும் உரிமைச் சட்ட செயல்பாட்டாளர் எஸ்.முருகேசன்தான் இதுபற்றிய உண்மைகளை முதலில் வெளியில் கொண்டு வந்தவர். மேலூர் பகுதிகளில் தனியார் குவாரி உரிமையாளர்கள் செய்வதை எதிர்த்து 2009ம் ஆண்டிலிருந்தே போராடி வருபவர். தகவல் பெறும் உரிமை சட்டத்தைப் பயன்படுத்தி பல செய்திகளை சுரங்கத்துறை மற்றும் ஏற்றுமதி துறைகளிடமிருந்து பி.ஆர்.பி.(PRP)க்கு செய்யும் ஏற்றுமதிகளை 2004–ல் இருந்து 2008 வரை கண்டறிந்தார். இந்த துறைகளிடமிருந்து பெற்ற தகவல்களில் பெரிய வேறுபாடு இருப்பதை சுட்டிக்காட்டி மதுரை உயர்நீதி மன்றத்தில் ஒரு ரிட் மனு வழக்கையும் கொண்டுவந்து புதிய விசாரணை வேண்டுமென்று கோரினார்.

இந்த ரிட் மனுவை ஏற்றுக் கொண்ட நீதிபதி சந்துரு 2011ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் சுரங்கத் துறையின் கமிஷனருக்கு, புதிய விசாரணை ஒன்றை ஏற்படுத்தி PRP கம்பெனியின் வரி ஏய்ப்பை கணக்கு காட்டுவதற்கு ஆணையிட்டு தீர்ப்பளித்தார். குத்தகைக்கு எடுத்த குவாரிகளை மேற்பார்வையிடுமாறும் அதிகாரிக்கு (சுரங்க) ஆணையிட்டார். முடிந்தால் 3 மாதத்திற்குள் இப்பணியை முடிக்குமாறும் பணிந்தார். அப்போதைய ஆட்சியர் அந்த கம்பெனிக்கு அனுமதி அளித்திருந்த ஆணையையும் இரத்து செய்து உத்தரவிட்டார். இந்த ஆணை ஜுலை 2ம் தேதி 2009ம் ஆண்டு கையெழுத்தாகி இருந்தது, ரத்து செய்யப்பட்டது, ஆனால், இந்த ஆணை நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என்று மதுரை டிவிசன் பென்ச் ஆணையிட்டது. முருகேசன் தன்னுடைய சட்டரீதியான போராட்டம் தொடரும் என்றும் கிரானைட் கொள்ளையை தடுக்க தான் தொடர்ந்து போராடுவேன் என்று கூறினார். தற்போதைய அரசின் நடவடிக்கைகள் நல்ல விளைவை கொண்டுவரும் என்று நம்புவதாகவும் கூறினார்.

T.லஜபதி ராய், உயர்நீதிமன்ற வழக்கறிஞர் கூறுவதென்னவென்றால் நீதிமன்ற நிறுத்தி வைப்பு காரணமாக மேலூர் பகுதிகளில் ஒத்திக்காலம் (Lease period) முடிவடைந்த பின்னும் பல குவாரிகள் வேலைகளை தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றன என்பதாகும். குவாரிகள் காவல் மிகுந்த இடங்களாக மாறிவிட்டன. இந்த 20 வருடங்களில் தற்போதுதான் அரசு அதிகாரிகள் குவாரிகளுக்கு வந்து விரிவான சர்வே செய்ய துவங்கி இருக்கிறார்கள் என்கிறார்.

**செயல்பாடுகள் துவக்கம்:**

மாவட்ட நிர்வாகம் சில பணிகளை துவக்கி இருக்கிறது. வழக்குகள் பதிவு செய்யப்பட்டு இருக்கின்றன. அத்துமீறி நுழைதல் (பிரிவு 447) திருட்டு (379) மற்றும் சாட்சியங்களை அழித்தல் (201) என்று இந்திய குற்றவியல் சட்டத்தின் அடிப்படையிலுள்ள, சுரங்க சட்டம் 1957 (மேம்பாடு மற்றும் ஒழுங்குபடுத்துதல்) படியும் பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தல் தடுப்புச் சட்டம் 1992–ன் படியும் கம்பெனிகளின் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

18 குழுக்களாக இந்த சர்வே குழு பிரிக்கப்பட்டு ஆகஸ்ட் 2ம் தேதி மதுரை மாவட்ட ஆட்சியர் அன்சுல் மிஸ்ரா மாவட்டத்திலுள்ள 175 குவாரிகளை மேற்பார்வையிட ஆணை பிறப்பித்திருக்கிறார். ஆட்சியரே நேரடியாக மேற்பார்வையில் பங்கு பெற்று இருக்கிறார். இந்த குழுக்கள் ஏற்கெனவே சட்ட மீறல்கள் மற்றும் ஆக்கிரமிப்புகள் அரசு நிலம் மற்றும் பட்டா நிலங்களில் நடந்திருப்பதையும் நீர் ஆதாரங்கள் அழிந்து போயிருப்பதையும் உறுதி செய்கின்றன.

குவாரி கம்பெனிகளின் அலுவலகங்கள் மற்றும் அலுவலர்களின் வீடுகளில் ரெய்டுகள் நடத்தப்பட்டுள்ளன. நிலங்கள் விற்பனை குறித்த ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. சில குவாரி கம்பெனி அலுவலகங்கள் மூடி சீல் வைக்கப்பட்டுள்ளதோடு சில கைதுகளும் நடைபெற்றுள்ளன.

மாவட்ட ஆட்சியர் அன்சுல் மிஸ்ரா அரசு நடவடிக்கைகள் திருப்தி தருவதாகும். 6 மண்டல அதிகாரிகள் தினசரி நடவடிக்கைகள் குறித்து அறிக்கை தருவதாகும் பல சட்டமீறல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் ஆகஸ்ட் 9ம் தேதி பிராண்ட் லைன் பத்திரிகைக்கு பேட்டி அளித்தார். ஆகஸ்ட் 8ம் தேதி வரை 133 கிரானைட் கம்பெனிகள் மேற்பார்வை செய்யப்பட்டுள்ளதென்றும் இவற்றில் 58 கம்பெனிகளில் விதிமீறல்கள் நடைபெற்றுள்ளதென்றும் கூறினார். “முதல் முறையாக இப்படிப்பட்ட ஒருங்கிணைந்த சர்வே நடைபெற்றுள்ளது. மேலும் சில கம்பெனிகள் மறைவாக இருந்து வந்திருக்கின்றன. குறிப்பிட்ட காலக்கெடு போதாது. மேற்கொண்டு 10 அல்லது 15 நாட்கள் தேவைப்படலாம்” என்று கூறினார்.

இப்போது குழுக்களின் முக்கிய கவனம் குவாரிகளின் மொத்தக் கன அடிகளாகும். ஏனெனில் எல்லைக் கற்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. எனவே மாவட்ட நிர்வாகம் பிற வழிகளின் மூலம் கணக்கெடுப்பை தொடர்கின்றது என்று கூறினார்.

30 நீராதாரங்கள் இந்தக் கம்பெனிகளால் பாழ்படுத்தப்பட்டிருக்கின்றன. ரங்கசாமியாபுரத்தில் நிலத்தடி சுரங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அரசு எதிர்கால பயன்பாட்டிற்காக வைத்திருந்த நிலத்தை இவர்கள் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். இந்த மாவட்டத்தில் நடைபெற்ற தனியார்மய ஆக்கிரமிப்பு காரணமாக பிற கம்பெனிகள் வேறுவித வழிமுறைகளை கையாண்டிருக்கிறார்கள். பயமுறுத்தி கிராமத்து மக்களை பணிய வைப்பது, லஞ்சம் கொடுப்பது போன்ற வழி முறைகள்தான் அவை. இப்போது மாவட்ட நிர்வாக நடவடிக்கைகள் காரணமாக மக்களிடம் நம்பிக்கை உருவாகி இருப்பதோடு நில அபகரிப்பு பற்றி விவரங்கள் சொல்ல முன் வருகிறார்கள். காவல்துறை கடந்த நான்கு வருடங்களில் குவாரி பணியாளர்கள் இயற்கைக்கு மாறாக மரணம் அடைந்தது பற்றி விசாரணை செய்ய துவங்கியுள்ளது.

வங்கிகள் கணக்கை இயக்காதிருக்க கம்பெனிகள் வரவு, செலவு செய்யாதிருக்க கேட்டுக்கொண்டிருக்கிறது. மணலை கொட்டி வைத்து சட்டத்துக்கு புறம்பாக கற்களை எடுத்த இடங்களை மூடி வைத்துள்ளதாக அலுவலர்கள் தெரிவித்தனர். ஆனால், எந்தவித ஆக்கிரமிப்பும் நடக்கவில்லை என்று கிரானைட் கம்பெனிகள் தெரிவிக்கின்றன. மூத்த வழக்கறிஞர் வீர கதிரவன் ரூ.15000 கோடி வரியிழப்பு என்பது அதிகப்படியான கற்பனை என்றும் நடந்துள்ள ஏற்றுமதி மற்றும் விலை விகிதங்களை வைத்து பார்க்கும்போது தவறு நேர்ந்திருக்க வாய்ப்பில்லை என்கிறார்.

விளம்பரத்திற்காக அலுவலர்கள் மிகைப்படுத்திக் கூறுவதாகவும் வெட்டி எடுக்கப்பட்ட அத்தனை கற்களையும் கிரானைட் கற்களாக எடுத்துக்கொள்ள முடியாதென்றும் விலை நிர்ணயம் என்பது தரமான கற்களுக்குத்தான் என்றும் கூறுகின்றார்.

எனவே குவாரி நடத்துபவர்கள் விற்பனை ஆகாதா கிரானைட் கற்களை தனியேதான் சேமித்து வைக்க

வேண்டியிருக்கும் அது விதிமுறைகளுக்கு உட்பட்டதுதான். "எனவே சட்டத்திற்கு உட்பட்ட முறைகளில்தான் செயல்பாடுகள் நடக்கின்றன. அவர்கள் நினைத்தபடியெல்லாம் அலுவலர்கள் பூட்டி சீல் வைக்க முடியாது" என்று விவாதித்தார்.

இப்படிப்பட்ட நிலையிலும் கிரானைட் உரிமையாளர்கள் பலம் வாய்ந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய கட்டுக்காவலை மீறி அவர்கள் இடங்களில் யாரும் நுழைந்துவிட முடியாது. ஊடகங்களில் இருந்தோ அரசு அலுவலகங்களில் இருந்தோ ஆட்கள் கிராமங்களுக்கு பார்வையிடச் சென்றால் அவர்கள் மோட்டார் சைக்கிளில் அவர்களை பின் தொடர்ந்து சென்று அவர்தம் நடமாட்டங்களை நடவடிக்கைகளை தம் முதலாளிகளுக்கு செல்பேசி மூலம் தகவல் தெரிவித்து விடுகின்றார்கள்.

ஆகஸ்ட் 12ம் தேதியன்று மாவட்ட ஆட்சியர் செல்லுமிடங்களுக்கு எல்லாம் பின்புறமாகவே தொடர்ந்து சென்று அவர் மேற்பார்வையிடும் குவாரி மற்றும் சேமிப்புக் கிடங்குகளுக்கு எல்லாம் பின் தொடர்ந்த ஓர் இளைஞன் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார்.

## அழிவில் புராதனச் சின்னங்கள்

மேலூர் திருப்பத்தூர் சாலையில் அமைந்துள்ள பஞ்சபாண்டவர் மலையிலிருந்து பார்த்தால் சட்டத்துக்கு புறம்பான சுரங்க வேலையின் பாதிப்பு எப்படி நம்முடைய புராதனச் சின்னங்களை அழிவுக்கு உட்படுத்தி இருக்கிறது என்பது தெரியும். புதைப்பொருள் ஆய்வு சின்னங்களும் எப்படி அழிந்து வருகின்றன என காணலாம். கிரானைட் நடத்துபவர்கள் இவைகளை கூட விட்டு வைக்கவில்லை. ஆயிரக்கணக்கான கிரானைட் குவியல்கள் இவைகளை சுற்றி கொட்டி வைக்கப்பட்டு சேமிப்பு கிடங்குகளாகக் காட்சியளிக்கின்றன.

புதைப் பொருள் நிபுணரான சி. சாந்தலிங்கம் ப்ரன்ட் லைன் பத்திரிக்கையினரிடம் பேசும்போதும், எப்படி தனியார் சுரங்க முதலாளிகள் புராதனச் சின்னங்களை பாதுகாக்கும் சட்டம் 1925க்கு எதிராக செயல்படுகின்றனர் என விவரித்தார். இதுபோன்ற புராதனச் சின்னங்களில் இருந்து 300 மீட்டருக்கு அப்பால்தான் எந்தவித விரிவாக்க பணிகளும் செய்யப்பட வேண்டும் என்று விதி இருக்கிறது. அதிலும் முதல் 100 மீட்டர் தடை செய்யப்பட்டுள்ள பகுதி அதற்கடுத்துள்ள 200 மீட்டர் ஒழுங்கு செய்யப்பட்ட பகுதி தடை செய்யப்பட்டுள்ள இடங்களில் எந்தவித கட்டுமானத்திற்கு அனுமதி இல்லை.

3ம் நூற்றாண்டு காலமெனக் கருதப்படும் சமணப் புராதன சின்னங்கள் திருவாதவூருக்கு அருகில் அமைந்துள்ளது. ஆனால், இவற்றுக்கு 50 மீட்டர் தொலைவிலேயே சுரங்க வேலைகள் நடைபெறுகின்றன. இப்புராதனச் சின்னங்கள் அந்த துறையின் மூலமாக அரசால் பாதுகாக்கப்பட்டு வரும் ஒன்றாகும். ஆனால் அவ்விடத்திற்கு செல்லும் சாலை கூட தடுக்கப்பட்டிருக்கிறது. இவைகள் தொடர்ந்தால் யாரும் பார்வையிடக்கூட செல்ல முடியாததாகிவிடும் என்று சாந்தலிங்கம் கூறுகின்றார்.

குவாரிக்காக பயன்படுத்தும் வெடிகள் கூட இச்சின்னங்களை அழித்துவிடும் அபாயம் இருக்கிறது என்று மேலும் எச்சரிக்கிறார்.

தேசிய புராதனச் சின்னங்கள் பாதுகாப்பு துறையினரால் பாதுகாக்கப்பட்டுவரும் இராண்டாம் நூற்றாண்டு சின்னங்கள் பஞ்சபாண்டவர் மலைக் குன்றுகளுக்கு அருகிலுள்ள இவை எப்படியோ தப்பிவிட்டன. இதற்காக நாம் சென்னை உயர்நீதிமன்றத்துக்கு நன்றி சொல்ல வேண்டும். சோக்கோ அறக்கட்டளை உள்ளூர் வாசிகளோடு சேர்ந்து இதற்காக கவனம் 2008ல் எடுத்துக் கொண்டது.

வேறொரு இடத்தில் இந்த சுரங்க வேலை தடை செய்யப்பட்டுள்ளது. உள்ளூர் மக்கள் விழிப்புணர்வால் அது எதுவென்றால் மேலூர் தாலுகாவிலுள்ள அரிட்டாபட்டி என்னுமிடத்தில் அமைந்துள்ள சிவனுக்குரிய குகைக் கோயில்கள் ஆகும். இது தேசியப் புராதனச் சின்னங்களில் ஒன்றாகும். அதே போன்று முதல் நூற்றாண்டை சேர்ந்த சமணக் கோவில்கள் மாநில புராதன சின்னங்களில் ஒன்றாகும். இது மதுரை தேனி சாலையில் அமைந்துள்ள முத்துபட்டி கிராமத்தில் அமைந்துள்ளது. இதுவும் பாதுகாக்கப்பட்டுள்ளது எனறு சாந்தலிங்கம் தெரிவித்தார்.

# நிலங்களை பிடுங்க பின்பற்றப்படும் நவீன யுக்திகள்

கிரானைட் குவாரி நடத்துபவர்கள் ஒரு புதிய வழிமுறையைக் கையாள்கிறார்கள். ஸ்டாலின் சமூக செயல்பாட்டாளரும் வழக்கறிஞருமான இவர் கூறுவது என்னவென்றால் மிகப்பெரும் கற்களை அந்த இடங்களில் சுற்றிலும் நிற்க வைத்துள்ளார்கள். இப்படிப்பட்ட நிலையில் ஒரு சிறிய விவசாயி மற்றும் கல்லுடைக்கும் தொழிலாளியால் உள்ளே நுழைய வாய்ப்பில்லாமல் போகும். எனவே வந்த விலைக்கு விற்றுவடுவதை தவிர வேறு வழியில்லாமல் போகும்.

இரங்கசாமியாபுரத்தில் ஒரு கல்லுடைக்கும் தொழிலாளர் குடும்பத்தை இந்த யுக்தியை பயன்படுத்தி ஒரு பெரிய குவாரி முதலாளி வெளியேற்றினார். அந்த குடும்பத்தினர் அந்த பெரிய குவாரிக்கு மிக அருகில் வசித்து வந்தனர். இது விதிமீறலாகும். 1959 சுரங்க விதிகளின்படி குடியிருப்புக்கு அருகில் அதாவது தொலைவு வரை சுரங்கம் அமைக்கப்படக்கூடாது.

குடியிருக்கும் எம். சாந்தி கூறுகிறார் ''எங்கள் வேண்டுகோள் எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கு. சுரங்க வேலை நடைபெறும்போது எங்கள் வீடுகள் எல்லாம் அதிரும். சுவர்களில் எல்லாம் வெடிப்பு விழுந்துவிட்டது. ஆனால், இந்த வீடுகளை விட்டு எங்கே நாங்கள் போய் வசிக்க முடியும்? சமீபத்தில் இந்த கிராமத்தை மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டதாக உள்ளூர் கிராம வாசிகள் கூறுகின்றனர்.

கீழவளவு கிராமத்தில் வசிப்பவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் ரிட் மனு ஒன்றை 2007ல் தாக்கல் செய்தது பற்றிக் கூறினார்கள். வி.ஆர். தங்கராசு என்பவர் மேலூர் தாலுகா மீன்பிடி தொழில் சங்கத் தலைவராவார். அவர் கூறும்போது சுரங்க வேலையின்போது எழும் கழிவுகளை குளம் குட்டைகளில் நிரப்புவதால் நீர் போக்கு வரத்து தடைப்படுகின்றது. நீர் மாசடைவதோடு காற்றும் மாசடைந்திருக்கின்றது. கீழவளவு மக்களின் கோரிக்கையை யாருமே கண்டு கொள்ளவில்லை என்கிறார்.

உள்ளூர் பஞ்சாயத்து 2007, மே 31ம் தேதி தீர்மானமொன்றை நிறைவேற்றியது. நீர் ஆதாரங்கள் அடைஞ்சான், சிறு மாணிக்கம், கூத்தன் செட்டி, பூரன், ஒத்து, பிள்ளையார், சின்னர் ஒத்து, துலுக்கன் குளம் போன்றவைகள் குவாரிகளிடமிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்று தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

கே. மெய்யார், கம்யூனிஸ்ட் கட்சியின் தாலுகா செயலாளரான இவர் இந்த பகுதியில் பல கிராமங்கள் தூசி மாசு காரணமாக பாதிக்கப்பட்டிருப்பதாக கூறினார். வட இந்தியாவிலிருந்து பெருமளவில் சுரங்க வேலைக்கு இடம் பெயர்ந்துள்ளதாகவும் அவர்கள் சுரண்டலுக்கு ஆளாகின்றனர் என்றும், மேலும் தெரிவிக்கிறார். 10 சதவீத மக்கள் கூட ஈட்டுறுதி மருத்துவ காப்பீடு பெறவில்லை என்கிறார்.

எல். ரத்தினம் என்பவர் செம்மேனிப்பட்டியில் வசிப்பவர். ஏழு ஏக்கர் பஞ்சமி நிலம் புறாக்கூடு மலைக்கு அருகில் உள்ளது. கிரானைட் கொள்ளையர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். இம்மலை ஒரு சமயத்தில் கம்பீரமாக இருந்தது. இப்போது தரைமட்டமாகிவிட்டது. மலை ஊற்றும், கிராம தேவதை கோவிலும் அழிக்கப்பட்டுவிட்டது.

எம். முத்தையா, ரங்கசாமிபுரத்தில் வசிப்பவர். இங்கு வாழ்பவர்கள் பலரும் சுமை தூக்குபவர்கள் மற்றும் கல்லுடைப்பவர்கள். அதில் பெரும்பான்மையானவர்கள் தலித்துகள். அதிலும் குவாரி முதலாளிகளுக்கு எதிராக குரல் கொடுக்க முடியாதவர்கள்.

வேறொரு முக்கியமான இடம் அம்மன் கோவில் பட்டியிலிருக்கும் சர்க்கரை பீர் மலை. இது அழிந்து போகும் நிலையிலிருக்கிறது.

இந்த அழகிய மலை வகுப்புவாதத்திற்கு எதிரான வகுப்பு ஒற்றுமைக்கு இலக்கணமாய் திகழ்வது ஏனெனில் அம்மலையின் உச்சியில் இந்துக் கோவிலும் முஸ்லீம் தர்காவும் அருகருகில் அமைந்துள்ளது என்று போற்றிப் பேசுகிறார்கள் உள்ளூர் வாசிகள்.

ஆதாரம்- Frontline September 7, 2012.

# கொட்டகாச்சியேந்தல் ஊராட்சித்தலைவர் மீதான சாதியப்பாகுபாடு

| | | |
|---|---|---|
| ஊராட்சித் தலைவர் | : | V. கருப்பன் த/பெ. வெள்ளையன் |
| வயது | : | 48 |
| கல்வி | : | நான்காம் வகுப்பு |
| மாவட்டம் | : | விருதுநகர் |
| ஒன்றியம் | : | நரிக்குடி |
| ஊராட்சி | : | கொட்டகாச்சியேந்தல் |

கொட்டகாச்சியேந்தல் ஊராட்சியானது கனைமறித்தான், பூவாக்கன்னி ஆகிய குக்கிராமங்களை உள்ளடக்கியது. கொட்டகாச்சியேந்தல் கிராமத்தில் சாதி இந்துக்களான சேர்வார் சுமார் 150 குடும்பங்கள், வண்ணான் ஒரு குடும்பம், மருத்துவர் ஒரு குடும்பம் மற்றும் தாழ்த்தப்பட்ட இந்து அருந்ததியர் 6 குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

இக்கிராமம் கடந்த 1996 ஆண்டு முதல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று ஒதுக்கப்பட்ட ரிசர்வ் தொகுதியாக இருந்து வருகிறது. என்றாலும் கடந்த 1996ம் ஆண்டு முதல் 2006ம் ஆண்டு வரை 10 ஆண்டுகளாக கிராம சாதி இந்துக்களின் மிரட்டலுக்கு பயந்து கொண்டு தாழ்த்தப்பட்ட மக்கள் யாரும் வேட்பு மனு தாக்கல் செய்ய முன்வரவில்லை.

இதனைத் தொடர்ந்து கடந்த 2006ம் ஆண்டு விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் நடவடிக்கையினால் கொட்டகாச்சியேந்தல் ஊராட்சியில் உள்ளாட்சி தேர்தல் நடைபெற்றது. இருப்பினும் கிராம சாதி இந்துக்கள் ஊர்கூட்டம் போட்டு அருந்ததி சமூகத்தைச் சேர்ந்த கருப்பன் (55) த/பெ சோனை என்பவரை போட்டியின்றி தேர்ந்தெடுத்தனர். கடந்த 5 ஆண்டுகள் சுதந்திரமாக செயல்பட முடியாமல் திரு. கருப்பன், சாதி இந்துக்களின் பினாமியாகதான் இருந்தார்.

எனக்கு மனைவி சித்ரா (35), மகள்கள் ராஜேஸ்பாண்டி (7), ஷோபனாதேவி (4) முகேஸ்வரி (2) ஆகியோர் உள்ளனர்.

கடந்த 2011 அக்டோபரில் நடைபெற்ற ஊராட்சித் தேர்தலில், பல்வேறு பிரிவுகளாக சிதறிப்போய் நான்கு ஆதிதிராவிட வேட்பாளர்கள் போட்டியில் இருந்தனர். வெறும் 42 ஓட்டுக்களே அதிகம் பெற்று, ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த வெள்ளையன் மகன் கருப்பன் ஆகிய ஊராட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

| வ.எண் | கிராமங்கள் | வாக்களர்கள் |
|---|---|---|
| 1 | கொட்டகாச்சினேந்தல் | 650 |
| 2 | கணையமரித்தான் | 600 |
| 3 | பூவாகணி | 50 |
| | மொத்தம் | 1300 |

கொட்டகாச்சியேந்தல் கிராமத்தில் மூன்று வார்டுகள் உள்ளது. இதில் இரண்டு வார்டுகள் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கணையமரித்தான் கிராமத்தில் உள்ள மூன்று வார்டுகளிலும் பொதுவாக ஆண்களே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பூவாகணி கிராமத்திற்கு வார்டு ஒதுக்கப்படவில்லை.

**உதவித்தலைவர் தேர்தல்:**

வெற்றி பெற்ற எனக்குப் பின்னால் சேர்வை வகுப்பைச் சேர்ந்தவர்கள் திருவெட்டை, ராஜாங்கம், செல்வராஜ், கணேசன் ஆகிய நான்கு நபர்கள் உதவினர். சேர்வை இனத்தைச் சார்ந்த ஒருவரை துணைத்தலைவர் தேர்தலில் போட்டியிட வைத்தனர். அதன்படி, சேர்வார் சமூகத்தைச் சேர்ந்த திருமிகு. உமா மகேஸ்வரி (30) க/பெ மாரிக்கண்ணு என்பவர் துணைத் தலைவராக உள்ளார். மேலும், மொத்தம் உள்ள 6 வார்டு உறுப்பினர்களில் அனைவரும் சாதி இந்துக்கள் ஆவர்.

**சாதியப்பாகுபாடு:**

கொட்டகாச்சியேந்தல் ஊராட்சியை பட்டியல் வகுப்பிற்கு (பொதுவானவை) ஒதுக்கீடு செய்தது ஆதிக்க சாதியினரால் சகித்துகொள்ள முடியவில்லை. 1996ஆம் ஆண்டு உள்ளாட்சி சட்டம் அமலுக்கு வந்தது. 1996ஆம் ஆண்டு முதல் இரண்டு ஐந்து ஆண்டுகாலம் மிரட்டியும், சாதி ஆதிக்க அதிகாரத்தைச் செலுத்தியும், ஆதிதிராவிட மக்கள் ஒருவரையும் பஞ்சாயத்து தலைவராக அனுமதிக்கவில்லை. சென்ற 2006–2011ம் ஆண்டு கால கட்டத்தில், ஒடுக்கப்பட்ட மக்களில் இருந்து சோனை மகன் கருப்பன் ஊராட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தற்பொழுது (2011–2016) ஊராட்சித் தலைவர் பதவி ஆதிதிராவிட (பொதுவான) மக்களுக்கு ஒதுக்கீடு நீடிக்கிறபடியால், மீண்டும் அவர்களே, போட்டியிட வாய்ப்பு இருந்தது. இதனால் இந்த முறை, நான் நான்கு முனை போட்டியில் மிக குறைந்தளவு ஓட்டு வித்தியாசத்தில் ஊராட்சித் தலைவராக வெற்றி பெற்றேன்.

என்னை ஊராட்சித் தலைவராக ஆதிக்க சாதியினரால் ஏற்றுகொள்ள முடியவில்லை. ஆதிதிராவிட மக்கள், ஆதிக்க சாதியினரைச் சார்ந்தே வாழ்க்கை வாழவேண்டிய நிலை கிராமங்களில் இன்றும் நீடிப்பதால் மிகுந்த அடக்குமுறைக்கும், பாகுபாட்டிற்கும் உள்ளாகி வருகின்றனர்.

**நாற்காலியில் அமரவிடுவதில்லை:**

ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவரை ஊராட்சித் தலைவராக தேர்ந்தெடுத்தாலும், வார்டு உறுப்பினர்கள், எழுத்தர் ஆகியோர் ஆதிக்க சாதியினராக உள்ளதால், பஞ்சாயத்து அலுவலக கட்டிடத்தில், பஞ்சாயத்து கவுன்சில் கூட்டம் நடைபெறும் வேளையிலும், என்னை தலைவர் நாற்காலியில் அமரவிடாமல் செய்தனர். இது குறித்து நான் ஏற்கெனவே பல புகார் மனுக்கள் அனுப்பியுள்ளேன்.

இவ்வாறு நடைபெறும் கூட்டத்தில் என்னால் தன்னிச்சையாகவும், சுதந்திரமாகவும் எந்தவொரு தீர்மானமும் நிறைவேற்ற முடியவில்லை. நான் கூறும் கருத்துக்களையும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இன்று வரை சாதி இந்துக்களே கூட்டம் நடத்துகின்ற நிலை இருந்து வருகிறது. மேலும் பஞ்சாயத்து அலுவலகத்தின் சாவி பஞ்சாயத்து எழுத்தரும், சாதி இந்துவுமான திரு. ரவீந்திரன் (25) த/பெ. முனியாண்டி என்பவரிடம் உள்ளது. இன்று வரை குறிப்பிட்ட நேரத்தில் பஞ்சாயத்து அலுவலகத்தை திறந்தது கிடையாது. எழுத்தர் ரவீந்திரன் அவர்கள் அலுவலகத்தினை எப்பொழுது திறக்கிறாரோ, அப்பொழுதுதான் நான் அலுவலகத்திற்கு செல்ல வேண்டும் என்கிற கட்டாயம் உள்ளது. மேலும் ரவீந்திரன் அவர்கள் பஞ்சாயத்து சம்பந்தமான எந்தவொரு தகவல்களையும் என்னிடம் தெரிவிப்பது கிடையாது. பஞ்சாயத்திற்குட்பட்ட கணக்கு வழக்குகளையும் என்னிடம் சரி வர காண்பிப்பது கிடையாது. பஞ்சாயத்து துணைத் தலைவராக திருமிகு. உமாமகேஸ்வரி அவர்கள் இருக்கின்ற போதும், அவரது கணவர் திரு. மாரிக்கண்ணு (35) த/பெ. முனியாண்டி என்பவர்தான் துணைத் தலைவராக செயல்பட்டு வருகின்றார். பஞ்சாயத்து வளர்ச்சி சம்பந்தமான திட்டங்களில் துணைத் தலைவர் உமா மகேஸ்வரி அவர்கள் எனக்கு முழுமையாக ஒத்துழைப்பு தருவது கிடையாது.

**காசோலையில் கையெழுத்துப் பெறுவது**

எந்த காரணத்திற்காக பணம் தேவைப்படுகிறது என்ற காரணத்தைக்கூட தெரிவிக்காமல் தலைவரிடம் காசோலையில் எழுத்தர் கையெழுத்தை வாங்கிக் கொள்வார். காரணம் கேட்டாலும் சொல்வதில்லை. இது ஆதிக்க சாதியினரின் அதிகாரத்தைக் காட்டுகிறது.

கடந்த 2012ம் ஆண்டு ஜனவரி மாதம் எழுத்தர் திரு. ரவீந்திரன் மற்றும் ஊராட்சி மன்ற துணைத் தலைவரின் கணவர் திரு. மாரிக்கண்ணு ஆகியோர், நூறு நாள் தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் உள்ள பயனாளிகளுக்கு சம்பளம் வழங்குவது, மின் கட்டணம், குடிநீர் கட்டணம் உள்ளிட்ட காரணங்களுக்காக நான்கு காசோலையில் என்னிடம் கட்டாயப்படுத்தியும் மிரட்டியும் கையெழுத்து வாங்கிச் சென்றனர்.

இதனைத் தொடர்ந்து 100 நாள் தேசிய வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கு கொடுக்க வேண்டிய ரூ.90யை ஒரு நபருக்கு ரூ.10 வீதம் பிடித்துக்கொண்டு பயனாளிகளுக்கு ரூ.80 மட்டும் கொடுத்து மோசடி செய்துள்ளனர். எழுத படிக்கத் தெரியாத என்னை ஊராட்சி மன்ற துணைத் தலைவர் உமாமகேஸ்வரி, அவரது கணவர் திரு. மாரிக்கண்ணு

மற்றும் எழுத்தர் திரு. ரவீந்திரன் ஆகியோர் காசோலையில் கையெழுத்து வாங்கி பஞ்சாயத்து திட்ட நிதிகளில் மோசடி செய்துள்ளனர் என்பதை தெரிந்து கொண்ட நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன்.

இச்சம்பவம் குறித்து 21.02.2012 அன்று தமிழக முதல்வர், விருதுநகர் மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளுக்கு எழுத்து மூலமாக பதிவுத் தபாலில் புகார் மனு அனுப்பி வைத்தேன். மேலும் கடந்த 17.04.2012 அன்று நரிக்குடி வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களிடமும், புகார் மனு அளித்தேன்.

### பஞ்சாயத்து கவுன்சில் கூட்டத்தில் அமர்வுபடி வழங்கவில்லை

ஊராட்சிக் கவுன்சில் கூட்டம் ஒவ்வொரு மாதமும் நடத்தி, தீர்மானம் எழுதி கையொப்பம் பெறவேண்டும். இந்த நகல்களை ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளுக்கு அனுப்பிட வேண்டும். பெயர் அளவிலேயே மூன்று கூட்டங்கள் நடந்துள்ளது.

ஒவ்வொரு மாதமும் நடைபெறும் அந்த கூட்டத்தில் வார்டு உறுப்பினர்களும், துணை தலைவர் மற்றும் ஊராட்சித் தலைவரும் கலந்துகொள்வார்கள். கலந்து கொண்ட அனைவருக்கும் அமர்வுபடி வழங்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று மாதங்களாக ஊராட்சித் தலைவருக்குரிய அமர்வுபடி வழங்கப்படவில்லை. இதிலும் சாதிய பாகுபாடு நீடிக்கிறது.

### கிராமசபை கூட்டங்கள்:

ஜனவரி 26 மற்றும் மே 1 ஆகிய தேதிகளில் கிராமசபை கூட்டங்கள் நடந்துள்ளது. இதுதவிர சிறப்புக் கூட்டங்களும் நடந்துள்ளது. ஒருவரும் கூட்டத்திற்கு வருவதில்லை. கிராமசபை கூட்டம் நடந்ததாக எழுதிக்கொண்டு வீடு வீடாகச் சென்று கையெழுத்து மட்டும் பெற்றுக்கொண்டனர். சாதிய ரீதியாக தாழ்த்தப்பட்டவர் தலைவராக இருப்பதால் கிராமசபை கூட்டங்களுக்கு மற்ற சாதியினரின் பங்கேற்பு இருப்பதில்லை.

### மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம்

கிராமங்களில் இந்த திட்டத்தினை 100 நாள் வேலைவாய்ப்புதிட்டம் என்றே அழைப்பார்கள். தலைவரிடம் கலந்து ஆலோசனை செய்யாமல், துணைத் தலைவர், இந்த 100 நாள் வேலை திட்டத்தினை பூவாகணி கிராமத்தில் கண்மாய் தூர்வாரும் பணியில் ஈடுபட்டு வந்தார்கள். ஊராட்சியின் தலைவரே ஊராட்சி நிர்வாக செயலரும் ஆவார். ஆகவே அவரிடம் எந்த ஒரு திட்டத்தினையும் மத்திய, மாநில அரசு வழங்கினாலும் அது குறித்து கலந்து ஆலோசனை செய்து, செயல்படவேண்டும். ஆனால் என்னிடம் ஆலோசனை பெறாமல் 100 நாள் வேலைத் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறார்கள்.

அதற்கு நான் மறுப்பு தெரிவித்த நிலையில் திருமிகு. உமாமகேஸ்வரி, அவரது கணவர் திரு. மாரிக்கண்ணு, எழுத்தர் திரு. ரவீந்திரன் ஆகியோர் என்னிடம் ஏண்டா சக்கிலிய தேவிடியா நாயே, வெற்றி பெற்றுவிட்டோம் என்று திமிராக இருக்காதே. நீ எப்படி பஞ்சாயத்து பணிகளை முழுமையாகவும், சுதந்திரமாகவும் செய்கிறாய் என்று பார்ப்போம். எங்களை மீறி நீ பஞ்சாயத்து நிர்வாகங்களை ஒன்றும் செய்ய முடியாது என்று சாதி ரீதியாக இழிவாகப் பேசி மிரட்டினர்.

இதே போன்று பஞ்சாயத்தின் அனைத்து பணிகளிலும், செயல்பாடுகளிலும் சாதிய பாகுபாடு நீடிக்கிறது. அவமரியாதை ஏற்பட்டு வந்துள்ளது. என் உயிருக்கு எப்பொழுதும் ஆபத்து இருந்த வண்ணமே உள்ளது. பஞ்சாயத்துக் கூட்டங்களை தலைவர் தலைமை தாங்கி நடத்துவதற்கும், சுதந்திரமாக முடிவெடுப்பதற்கும், ஜனநாயக ரீதியான முறைகள் முற்றிலுமாக பின்பற்றப்படவில்லை.

### மாவட்ட ஆட்சியரின் விசாரணை:

இத்திட்டம் குறித்து 13.01.2012ம் தேதி முதல் 19.01.2012ம் தேதி வரை 7 நாட்கள், பூவாகணி கிராமத்தில் கண்மாய் மராமத்து வேலைகள் நடைபெற்றது. இதில் சுமார் 170 நபர்கள் வேலை செய்தார்கள். இவர்களுக்கு பணம் பட்டுவாடா செய்வதற்காக காசோலையில் கையெழுத்து பெற்று ரூ. 1,16,297/–ஐ இத்திட்ட நிதியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இப்பணம், வேலை செய்த நபர்களுக்கு வழங்கப்படவில்லை. இந்த தீர்மானம் குறித்து தீர்மான நோட்டில் போலியான கையெழுத்தும், காசோலையில் துணைத் தலைவரின் கையெழுத்தும் போலியாக போடப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் ஈடுபட்டவர்கள், ஊராட்சி எழுத்தரும், ஊராட்சி தலைவரை ஜெயிக்கவைக்க பின்னால் இருந்து இயக்கி இருந்தவர் திருவெட்டைசேர்வை என்பவர் ஆவார். ஆகவே, திடீரென மாவட்ட ஆட்சியர், மாவட்ட பஞ்சாயத்து துணை இயக்குநர் (தணிக்கை) நேரில் பார்வையிட்டதின் விளைவாக தொடர்ந்து தவறுகள் நடைபெற்று வந்துள்ளதையும், பணம் கையாடல் நடைபெற்றுள்ளதும் கண்டறியப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் கடந்த 07.06.2012 மற்றும் 08.06.2012 ஆகிய இருதினங்களாக மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், வட்டார வளர்ச்சி

அலுவலர் – நரிக்குடி, வட்டாட்சியர் திருச்சுழி உள்ளிட்ட அரசு அதிகாரிகள் கொட்டகாச்சியேந்தல் பஞ்சாயத்திற்கு வந்து விசாரணை மேற்கொண்டனர். மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் எனக்கு ஏற்பட்ட தீண்டாமை பாகுபாடு சம்பந்தமாக புகார் கூறினேன். இருதரப்பினரையும் அழைத்து விசாரணை செய்த மாவட்ட ஆட்சியர் அவர்கள் சமாதானமாக போகுமாறு கூறினார்.

இதனைத் தொடர்ந்து நரிக்குடி வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள் பஞ்சாயத்து வளர்ச்சி நிதியில் மோசடி செய்துள்ளதாக என் மீதும், துணைத் தலைவர் மற்றும் எழுத்தர் உள்ளிட்டோர் மீதும் நரிக்குடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். இப்புகார் மனு தொடர்பாக காவல் நிலைய குற்ற எண். 107/2012 பிரிவுகள் 468, 471, 409, 420 இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் 34 இந்திய தண்டனைச் சட்டத்தின்கீழ் உண்மைக்கு புறம்பாக என் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர். தற்போது என்னுடைய காசோலையில் கையொப்பமிடும் அதிகாரத்தையும் இரத்து செய்துள்ளனர். மாவட்ட ஆட்சியர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோரின் விசாரணை, பாதிக்கப்பட்ட எனக்கு எதிராக உள்ளது.

**ஆதாரம்:**
**மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (HRF)**

## ‘தானே’க்கு பிறகு...
## கனவாகி போன ஒரு லட்சம் வீடுகள் திட்டம்

கடலூர் மாவட்டத்தில், ‘தானே’ புயலில் குடிசைகளை இழந்த ஒரு லட்சம் பேருக்கு, தலா ஒரு லட்சம் ரூபாயில் வீடுகள் கட்டித்தரப்படும் என கவர்னர் வெளியிட்ட அறிவிப்பு கிடப்பில் போடப்பட்டு உள்ளதால் பாதிக்கப்பட்ட மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

**சேதம் எவ்வளவு ?**

மாவட்டத்தில், புயலால், 2,58,730 குடிசைகள் சேதமடைந்தன. இதில், 40,453 குடிசைகள் முற்றிலும் சேதமடைந்தன. மேலும், 1,07,095 ஓட்டு வீடுகளும் நாசமாயின. முதல்வர் ஜெயலலிதாவின் உத்தரவுப்படி, பாதி சேதமடைந்த வீடுகளுக்கு 2,500 ரூபாய்; முற்றிலும் சேதமடைந்த வீடுகளுக்கு 5,000 ரூபாய், உடனடி நிவாரணமாக வழங்கப்பட்டது. இந்த நிதி போதுமானதாக இல்லாததால் பலரால் வீட்டை சீரமைக்க முடியவில்லை. இதை கருத்தில் கொண்டு, தலா ஒரு லட்சம் ரூபாய் மதிப்பில், ஒரு லட்சம் பேருக்கு வீடுகள் கட்டித்தரப்படும் என கடந்த ஜனவரி மாதம், கவர்னர் ரோசய்யா சட்டசபையில் அறிவித்தார்.

**வேலை நடக்கவில்லை**

ஆறு மாதங்களுக்கு மேல் ஆகியும், இந்த வீடுகளைக் கட்டித் தருவதற்கான எந்த முயற்சியும் அரசால் எடுக்கப்படவில்லை எனத் தெரிகிறது, இந்தத் திட்டம் குறித்து, உயர் அதிகாரிகளை கேட்ட போது, ’அரசின் கொள்கை முடிவு என்பதால், இதைப்பற்றி வேறு எதையும் விரிவாகக் கூற முடியாது’ என்றனர். பல இடங்களில், குடிசைக் கூரைகளில் ஏற்பட்ட ஓட்டைகளை, தென்னங்கீற்று, கரும்புச் சோலைகளைக் கொண்டு, கூரை அமைத்து மறைத்து வருகின்றனர். இந்தத் திட்டத்தில் வேலை தொடங்கப்படாததற்கு, மத்திய அரசு நிதி வழங்காதது உள்ளிட்ட பல காரணங்கள் கூறப்படுகின்றன.

**காரணங்கள் பல...**

**மாவட்ட அரசியல் வாதிகளும், அதிகாரிகளும் கூறும் காரணங்கள்:**

- மத்திய குழுவினர் வந்தபோது, பாதிக்கப்பட்ட வீடுகளை பார்வையிட்டுச் சென்றனர். அரசு கேட்ட, நிவாரண நிதியை மத்திய அரசு வழங்கி இருந்தால், அரசு எப்போதோ திட்டத்தை துவங்கியிருக்கும்.
- மற்ற நிவாரணப் பணிகளுக்கு கோடிக்கணக்கான ரூபாய் நிதியை செலவழித்ததால், இந்தத் திட்டத்திற்கு, மாநிலஅரசால் நிதி ஒதுக்க முடியவில்லை.
- 2.5 லட்சம் பேர் பாதிக்கப்பட்ட நிலையில், ஒரு லட்சம் பேருக்கு வீடு கட்டிக் கொடுத்தால், அதுவும் சர்ச்சையை ஏற்படுத்தும் என்பதால், இந்தத் திட்டத்தை அரசு கிடப்பில் போட்டுள்ளது.
- ஒரு லட்சம் ரூபாயில் வீடுகள் எப்படி அமைக்க முடியும் என்றும் அரசியல் வாதிகள் பலர் கேள்வி எழுப்புகின்றனர். இதனால், நிதியை மேலும் அதிகப்படுத்தி, அரசு வீடுகள் கட்டித் தரவும் வாய்ப்பு உள்ளதாகக் கூறுகின்றனர்.

இவ்வாறு காரணங்கள் அடுக்கப்படுகின்றன. எது, எப்படியோ, தங்களுக்கு வீடு கிடைக்க, முதல்வர் ஜெயலலிதா நிச்சயம் நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கையோடு, கடலூர் மாவட்ட மக்கள் காத்திருக்கின்றனர்.

**26.7.2012, தினமலர்**

# உள்ளூர் (அதிகாரிகள்) பாபுக்கள் நான் தோற்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். நான் என்னுடைய போரை கைவிட மாட்டேன் என்கிறார்

**சவ்வி ரஜாவத், தலைவர் சோடா கிராமம் ராஜஸ்தான் மாநிலம்**

‘‘பல வருடங்களாக நிலுவையில் இருக்கும் திட்டங்களுக்கான நிதிகளை அளிக்க உள்ளூர் அதிகாரிகளை நாங்கள் கெஞ்சிக்கேட்டு துரத்த வேண்டும். தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் எனது கிராமத்திற்கு ரூ. 3 கோடி வர வேண்டும். ஆனால், 25 சதவீத நிதி ஒதுக்கப்படவே நாங்கள் போராட வேண்டியிருந்தது. நாங்கள் செய்யும் வேலையை நிறுத்த துணை வட்டார அலுவலர் (SDO) முயற்சித்தபோது, வளர்ச்சியை தடை செய்யும் சட்டத்திற்குப் புறம்பான வேலை மீது) தடை ஆணையை அவர் அளிக்கவில்லை. இந்தத் திட்டத்தை நிறுத்தாமல் இருந்திருந்தால், நாங்கள் திட்டமிட்டிருந்த கணினிமயமான ராஜீவ் காந்தி சேவை கேந்திரத்தின் கீழ் சோலார் பேனல்களோடு கூடிய (சூரிய ஒளியில் இயங்கும்) NREGA அலுவலகம் ஒன்று 2010க்குள் கட்டப்பட்டிருக்கும்.

எங்கள் கிராமத்திற்கென எந்த வரைபடங்களும் இல்லை என்று எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், எங்கள் வேலைக்குத் தடை உத்தரவுகள் போடும்போது வரைபடங்கள் திடீரென்று முளைக்கின்றன. செல்வாக்குள்ள ஒரு குடும்பம், எங்கள் கிராமத்திற்கு தண்ணீர் தரும் நீர்த்தேக்கத்தின் முன் கிராமத்திற்கு தண்ணீர் வருவதை தடுக்கும் வகையில் ஒரு குளத்தைக் கட்ட ஆரம்பித்தனர். ஊராட்சி குறுக்கிட்டாலும், SDO அந்தக் குளம் கட்டுவதற்கு தடை உத்தரவு வழங்கவில்லை.

கடந்த வருடம், பொது நிலத்தில் உள்ள ஆக்கிரமிப்பு தொடர்பாக, நான் காவல் நிலையத்தை அணுகியபோது, எனக்கு உதவக்கூடாது என்று காவலர்களுக்கு SDO உத்தரவிட்டார். உள்ளூர் அதிகாரிகள் நான் தோல்வியடைய வேண்டும் என்று விரும்பினாலும், எனது கிராமத்திற்கு சேவை செய்வதற்கான போராட்டத்தை நான் கைவிட மாட்டேன்.

நான் பல விருதுகளை வாங்கியிருந்த போதும், துரதிஷ்டவசமாக, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கார்பரேட் துறையினர் யாரிடமிருந்தும் நான் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கவில்லை.

ஊராட்சித் தலைவருக்கு மாத வருமானம் ரூ.3,000தான் எனது நிதித் தேவைக்கு என் குடும்பத்திலிருந்து உதவி கிடைப்பதால், என்னால் செயல்பட முடிகிறது. என்னுடைய வேலை நடப்பதற்காக பல மாவட்ட அலுவலகங்களுக்கு அடிக்கடி பயணம் செய்ய முடிகிறது. ஆனால், 7–8 நபர் அங்கத்தினராக உள்ள குடும்பத்தைக் கொண்ட ஊராட்சித் தலைவர்களால் மாதம் ரூ.3,000த்தை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்? இது பொருளாதார ரீதியாக சாத்தியமில்லை.

அரசாங்க நலத்திட்டங்கள் மற்றும் பஞ்சாயத்து ராஜ்சட்டங்கள் பற்றி ஒரு ஊராட்சித் தலைவருக்கு தீவிரமான பயிற்சி தேவை. ஆனால், வருத்தப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், நானே பல பஞ்சயாத்து ராஜ் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டுள்ளேன். அங்கு பயிற்சி எடுப்பவர்களே இந்த மக்களுக்கு ஒன்றும் புரியாது என்று கிண்டல் செய்வதைக் கேட்டிருக்கிறேன்’’.

**ஆதாரம்: டைம்ஸ் ஆஃப் இந்தியா, 8 ஏப்ரல் 2012.**
**ராஜஸ்தான் மாநிலத்தின் ஒரு ஊராட்சித் தலைவரின் அனுபவம்**

# தலித் ஊராட்சிமன்றத் தலைவர் மேல் நடத்தப்பட்ட சாதிய பாகுபாடு

**காடனேரி ஊராட்சி, மதுரை மாவட்டம்.**

அனுப்புனர்,
பெருமாள் (52),
த/பெ. கருப்பன் (லேட்),
காடனேரி பஞ்சாயத்து தலைவர்
க.எண்.20/8, மேலகாடனேரி,
காடனேரி அஞ்சல், பேரையூர் வட்டம்,
மதுரை மாவட்டம்,

பெறுநர்,
திருமிகு. செயல் இயக்குநர்,
எவிடன்ஸ்,
தேவ இரக்கம் இல்லம்,
9–B, பி.டி.ராஜன் ரோடு, 8வது தெரு,
(சிங்கராயர் காலனி அருகில்)
மதுரை – 2.

**ஐயா,**

**பொருள்: பேரையூர் வட்டம் – தாழ்த்தப்பட்ட இந்து அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த நான், காடனேரி ஊராட்சி மன்றத் தலைவராக உள்ளேன் – நான் பதவியேற்ற நாளிலிருந்து ஊராட்சி மன்றத் துணைத் தலைவரும், சாதி இந்துவான நாயக்கர் சமூகத்தைச் சேர்ந்த திரு. பாண்டி (50) த/பெ. வெங்கடசாமி, ஊராட்சி மன்ற எழுத்தர் திரு. சுரேஷ் (28) த/பெ. ராமசாமி ஆகியோர் என்னை சாதி ரீதியாக இழிவாகப் பேசுவதும், பஞ்சாயத்து பணிகளை சுதந்திரமாக செய்யவிடாமல் தடுத்து வருகின்றனர் – இந்நிலையில் கடந்த 31.3.2012 அன்று மாலை சுமார் 5.00 மணியளவில் மதுரையில் உள்ள மனித உரிமை அமைப்பில் எனக்கு ஏற்பட்ட வன்கொடுமை குறித்து எழுத்து மூலமாக புகார் தெரிவித்தேன் – இதனை தெரிந்து கொண்ட சாதி இந்துவும் சி.ஐ.டி. காவலருமான திரு. ஜெயராஜ்(32) த/பெ. ராஜு நாயுடு என்பவர் கடந்த 13.4.2012 அன்று காலை 7.30 மணியளவில் என்னிடம் விசாரணை செய்தார் – நான் அவரிடம் நடந்த வன்கொடுமை குறித்து கூறவே, சாதி இந்துக்களான சி.ஐ.டி. காவலர் திரு. ஜெயராஜ், திரு. ராமு (25) த/பெ. பெருமாள் உள்ளிட்டோர் என்னை சாதி ரீதியாக இழிவாகப் பேசி, என்னையும் என் குடும்பத்தாரையும் உயிரோடு கொளுத்திவிடுவதாக கொலை மிரட்டல் விடுத்தனர் – பின்னர் இச்சம்பவம் குறித்து 14.4.2012 அன்று டி. கல்லுப்பட்டி காவல்நிலையத்தில் வாய்மொழியாக புகார் தெரிவித்தேன் – நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் குற்ற எண்.102/2012 பிரிவுகள் 294(b), 506(1) இ.த.ச. மற்றும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 பிரிவு 3(1)(10) ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்து பஞ்சாயத்து எழுத்தர் திரு. சுரேஷ் என்பவரை மட்டும் முதல் தகவல் அறிக்கையில் சேர்த்துள்ளனர் – எனவே, சாதி ரீதியாக இழிவாகப் பேசி, கொலை மிரட்டல் விடுத்த, சாதி இந்துக்களான பஞ்சாயத்து துணைத் தலைவர் திரு. பாண்டி, சி.ஐ.டி. காவலர் திரு.ஜெயராஜ், திரு. ராமு ஆகியோர் மீது தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்து மற்றும் எழுத்தர் சுரேஷ் அவர்களை இடமாற்றம் செய்தும் தக்க நடவடிக்கை எடுத்து, பாதிக்கப்பட்ட எனக்கு தகுந்த நீதி, நிவாரணம் மற்றும் பாதுகாப்பு வழங்குவது குறித்து...**

நான், மேற்கண்ட முகவரியில் என் மனைவி வள்ளி (49) என்பவருடன் வசித்து வருகின்றேன். என் மகன் மாயகிருஷ்ணன் (30), மகள்களான அழகம்மாள் (28), பிச்சைப்பாண்டியம்மாள் (23) ஆகியோர் திருமணமாகி தனித்தனியாக வசித்து வருகின்றனர். நான் தாழ்த்தப்பட்ட இந்து அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவன். நான் காடனேரி ஊராட்சி மன்றத் தலைவராக உள்ளேன்.

காடனேரி கிராமத்தில் சாதி இந்துக்களான கோனார் சுமார் 65 குடும்பம், கவுண்டர் சுமார் 40 குடும்பம், நாயக்கர் சுமார் 90 குடும்பம், தாழ்த்தப்பட்ட பள்ளர் சுமார் 200 குடும்பம் மற்றும் அருந்ததியர் சுமார் 60 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். காடனேரி பஞ்சாயத்தானது மேலக்காடனேரி, கீழக்காடனேரி ஆகிய குக்கிராமங்களை உள்ளடக்கியது.

கடந்த 2006ம் ஆண்டு காடனேரி பஞ்சாயத்து தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்பட்டது. 2011ல் நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தலில் நான், திரு. லட்சுமணன் (53) த/பெ. குருசாமி, திரு. மாடசாமி (எ) சங்கிலி (40) மற்றும் திருமிகு. பானுமதி (25), திரு. பொன்னுசாமி (35) ஆகியோர் தலைவர் பதவிக்கு போட்டியிட்டோம். உள்ளாட்சி மன்றத் தேர்தலின் முடிவில் நான் வெற்றி பெற்றேன். கடந்த 21.10.2011 அன்று காடனேரி ஊராட்சி மன்றத் தலைவராக பதவியேற்றேன். ஊராட்சி மன்றத் துணைத் தலைவராக சாதி இந்துவான நாயக்கர் சமூகத்தைச் சேர்ந்த திரு. பாண்டி (50) த/பெ. வெங்கடசாமி என்பவர் உள்ளார்.

தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த நான் பஞ்சாயத்து தலைவராக உள்ளதை பொறுத்துக் கொள்ள முடியாத காடனேரி ஊராட்சி மன்ற துணைத் தலைவர் திரு. பாண்டி மற்றும் ஊராட்சி மன்ற எழுத்தர் திரு. சுரேஷ் (28) த/பெ. ராமசாமி ஆகியோர் என்னிடம், உனக்கு பஞ்சாயத்து நிர்வாகம் பற்றி எதுவும் தெரியாது. அதனால் நாங்கள் சொல்வதைத்தான் நீ கேட்க வேண்டும். நாங்கள் சொல்லும் இடத்தில்தான் நீ கையெழுத்து போட வேண்டும். உனக்கான அனைத்து செலவுகளையும் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று கூறினார்கள். அதற்கு நான் உடன்பட மறுத்துவிட்டேன். அதனால் ஆத்திரமடைந்த ஊராட்சி மன்ற எழுத்தர் திரு. சுரேஷ் நீ எப்படி பஞ்சாயத்தை நிர்வாகம் பண்ணுகிறாய் என்று நான் பார்த்துக் கொள்கிறேன். உன்னை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து தூக்கிவிடுவேன் என்றும் மிரட்டினார். அதன்பின்னர் காடனேரி கிராமத்தில் வசித்து வரும் நாயக்கர் சமூகத்தைச் சேர்ந்த திரு. சென்றாயப் பெருமாள் (29) த/பெ. சுந்தரம் என்பவர் என்னிடம் வந்து எங்கள் சமூகத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திரு. பாண்டி மற்றும் எழுத்தர் சுரேஷ் ஆகியோர் கொடுக்கும் ரூ. 5 லட்சம் பணத்தை வாங்கிக் கொண்டு அவர்கள் சொல்வது போல் நடந்துகொள். இல்லையென்றால் உன்னை அடித்துக் கொன்று விடுவோம் என்று மிரட்டினார். இதற்கு நான் ஐயா, ஏன் என்னிடம் வீண்பிரச்சனை செய்கிறீர்கள். நான் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுக்க வேண்டி வரும் என்று கூறினேன். அதற்கு சாதி இந்துவான சென்றாயப் பொருமாள் என்பவர், ஏண்டா சக்கிலி நாயே, நீ காவல்நிலையத்திற்குச் சென்று புகார் கொடுத்தால் உன்னையும், உன் மனைவியையும் கொலை செய்துவிடுவோம் என மிரட்டினார். சாதி இந்துக்களின் மிரட்டலுக்கு பயந்து கொண்டு நானும் அமைதியாக இருந்துவிட்டேன்.

இதனைத் தொடர்ந்து சாதி இந்துவான எழுத்தர் திரு. சுரேஷ் மற்றும் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திரு. பாண்டி ஆகியோர் பஞ்சாயத்துத் தொடர்பாக வட்டார வளர்ச்சி அலுவலகத்திலிருந்து வருகின்ற அரசுத் தகவல்கள் எதையும் என்னிடம் தெரியப்படுத்துவதில்லை. ஊராட்சி மன்றத்திற்கு உட்பட்ட பதிவேடுகள் உள்ளிட்ட ஆவணங்கள் அனைத்தையும் அவர்களுடைய கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இதுகுறித்து நான் எழுத்தர் சுரேஷ் அவர்களிடம் நியாயம் கேட்டதற்கு, ஏண்டா சக்கிலி நாயே, உனக்கெல்லாம் பஞ்சாயத்து நிர்வாகம் குறித்து என்னடா தெரியும். உன்னிடம் பதிவேடுகள், காசோலைகள் ஆகியவற்றைக் கொடுக்க முடியாது என்று சாதி ரீதியாக இழிவாகப் பேசி என்னைத் தாக்க முயற்சித்தார்.

இந்நிலையில் கடந்த 2 மாதங்களுக்கு முன்பு காடனேரி கிராமத்திலிருந்து சுமார் 1 கி.மீ. தொலைவில் உள்ள காடனேரி விளக்கு அருகே எனது பெயர் பலகை இருந்தது. இப்பலகையை காடனேரி கிராமத்தில் வசித்து வரும் சாதி இந்து வன்கொடுமைக் கும்பல் உடைத்துவிட்டனர். இச்சம்பவம் குறித்து டி.கல்லுப்பட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். அதன் ரசீது (எண். 67/2012) மட்டும் கொடுத்தார்கள். இந்நிலையில் கடந்த 13.3.2012 அன்று மாலை சுமார் 5.00 மணியளவில் மதுரையில் உள்ள மனித உரிமை அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்னை நேரடியாக சந்தித்து பஞ்சாயத்துத் தொடர்பாக விவரங்கள் கேட்டனர். நான் அவர்களிடம் எனக்கு ஏற்பட்டுள்ள பிரச்சனை குறித்து எழுத்து மூலமாக புகார் கொடுத்தேன்.

இச்சம்பவம் தொடர்பாக காடனேரி கிராமத்தில் வசித்து வரும் சாதி இந்துவான நாயக்கர் சமூகத்தைச் சேர்ந்த சி.ஐ.டி. காவலர் திரு. ஜெயராஜ் (32) த/பெ. ராஜூ நாயுடு என்பவர் கடந்த 13.4.2012 அன்று காலை 7.30 மணியளவில் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு உடனடியாக வருமாறும், உன்னை மேலிடத்திலிருந்து விசாரிக்குமாறு கூறியுள்ளார்கள் என்றும் என்னிடம் கூறினார். நானும் பஞ்சாயத்து அலுவலகத்திற்குச் சென்று என்ன விவரம் என்று கேட்டேன். அதற்கு அவர் மனித உரிமை அமைப்பிற்கு புகார் தெரிவித்தீர்களா? என்று கேட்டார். நான் அவரிடம் மேற்கண்ட சம்பவம் குறித்து தெரிவித்தேன். நான் கூறியதை திரு. ஜெயராஜ்

தொலைபேசியில் பதிவு செய்தார். நான் ஏன் இதை உங்கள் தொலைபேசியில் பதிவு செய்கின்றீர்கள் என்று கேட்டதற்கு, மேலிடத்தில் பதிவு செய்யச் சொல்லியுள்ளனர் என்று கூறினார்.

பின்னர் அன்றே காலை சுமார் 11.30 மணியளவில் வீட்டிலிருந்து என்னிடம் காடனேரி கிராமத்தின் ஊர்க்காவலரான திரு. ராஜூ (55) என்பவர் நாயுடு சமூகத்தினர் வசித்து வரும் தெருவிற்கு என்னை வரச்சொன்னார். நானும், அவர்கள் சொன்ன இடத்திற்குச் சென்றேன். உடனே அங்கிருந்த நாயுடு சமூகத்தைச் சேர்ந்த சி.ஐ.டி. காவலர் திரு. ஜெயராஜ், திரு.ராமு (25) த/பெ. பெருமாள், பெருமாள் (27) த/பெ. கந்தசாமி உள்ளிட்டோர் என்னை பார்த்து ஏண்டா சக்கிலிப் பயலே உனக்கு எவ்வளவு தைரியமிருந்தால் நாயுடு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மீது புகார் கொடுத்திருப்பாய் என்று சாதி ரீதியாக இழிவாகவும், அருவருக்கத்தக்க வார்த்தைகளால் பேசி, இனிமேல் இதுபோன்று புகார் கொடுத்தால் உன்னை உன் குடும்பத்துடன் கொளுத்தி விடுவதாக கொலை மிரட்டல் விடுத்தனர். சாதி இந்துக்களின் மிரட்டலுக்கு பயந்துகொண்டு, நான் ஒன்றும் பேசாமல் அங்கிருந்து வீட்டிற்கு வந்து விட்டேன். பின்னர் மறுநாள், 14.4.2012 அன்று வீட்டிலிருந்த என்னை டி. கல்லுப்பட்டி காவல்நிலைய ஆய்வாளர் திரு. ஜெயராமன் உள்ளிட்ட 4 காவலர்கள் விசாரணை செய்ய வேண்டும் என்று கூறி, காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கு ஆய்வாளர் அவர்களிடம், எனக்கு ஏற்பட்ட வன்கொடுமைச் சம்பவம் குறித்து வாய்மொழியாக புகார் கூறினேன். நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் குற்ற எண்.102/2012 பிரிவு 294(b), 506(1), இந்திய தண்டனைச் சட்டம் (இ.த.ச) மற்றும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை சட்டம் 1989 பிரிவு 3(1)(10) ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்து, ஊராட்சி மன்ற எழுத்தர் சுரேஷ் என்பவரை மட்டும் கைது செய்துள்ளனர்.

ஆகவே கனம் சமூகம் அவர்கள், தாழ்த்தப்பட்ட இந்து அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றத் தலைவரான என்னை, சாதி ரீதியாக இழிவாகப் பேசியும், கொலை மிரட்டல் விடுத்தும், பஞ்சாயத்துத் தொடர்பான வளர்ச்சித் திட்டங்களை நடைபெறவிடாமல் தொடர்ந்து பிரச்சனை செய்து வரும் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திரு. பாண்டி உள்ளிட்ட வன்கொடுமை கும்பல் மீது தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989ன் கீழ் வழக்குப் பதிவு செய்து, எழுத்தர் சுரேஷ் அவர்களை இடமாற்றம் செய்து, தக்க நடவடிக்கை எடுத்து, பாதிக்கப்பட்ட எனக்கு தகுந்த நீதி, நிவாரணம் மற்றும் பாதுகாப்பு வழங்குமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நாள்: 4.5.2012
இடம்: மதுரை

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
(பெருமாள்)

**ஆதாரம் – Evidence**

# கருவேல மரம் வெட்டியதில் ஊழல்

## காசு கொடுத்து தகவல் கேட்டதற்கு வெற்றுத்தாள் கொடுத்து ஏமாற்றியது அம்பலம்

திருச்சி மாவட்டம், பெரகம்பி ஊராட்சியை சேர்ந்தவர் சீனிவாசன் (33) அப்பகுதியில் உள்ள மரங்களை வெட்டியதில், ஊழல் நடந்திருப்பதாகவும், அதில் அதிகாரிகளுக்கு தொடர்பு இருப்பதாகவும், திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புகார் அளிக்க வந்தார். பெரகம்பி ஊராட்சி ஏரியில், ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான கருவேல மரங்கள் வெட்டுவதற்கான ஏலம்விடப்பட்டது. அதில் 50 லட்சம் ரூபாய்க்கு ஊழல் நடந்துள்ளது. இந்த ஊழலில், பெரகம்பி ஊராட்சி, மணச்சநல்லூர் யூனியன் அதிகாரிகளுக்கும் தொடர்பு உள்ளது. இதுகுறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் சில தகவல்களை பெற கடந்த மே மாதம், 30ம் தேதி கேட்டேன். மண்ணச்சநல்லூர் பி.டி.ஓ., மல்லிகா தகவல் தராததால் ஜூன் 30ம் தேதி மாவட்ட ஆட்சியருக்கு மேல் முறையீடு செய்தேன். ஜூலை 16ம் தேதி எனக்கு வந்த பதிலில், 'நீங்கள் கேட்ட ஆவணங்கள், 3,216 பக்கங்கள் கொண்டவை.

ஒரு பக்கத்துக்கு, ஐந்து ரூபாய் வீதம், 16 ஆயிரத்து 80 ரூபாய் செலுத்தினால் தரப்படும்' என கூறப்பட்டிருந்தது. கடந்த, ஜூலை, 20ம் தேதி டி.டி., எடுத்து அனுப்பினேன். எந்த பதிலும் வரவில்லை. ஆகஸ்ட், 6ம் தேதி டி.ஆர். ஒ.,விடம் முறையிட்டேன். 13ம் தேதி, மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்த பின், இரண்டு நாட்களில் தகவல் தர உத்தரவிட்டார். நீண்ட இழுபறிக்கு பின், ஆகஸ்ட், 23ம் தேதி பதிவுத் தபாலில் 2,728 பக்கங்களை அனுப்பினர். அதில் 268 பக்கங்களில் சிலவற்றை தவிர, நான் கேட்காத தகவல்கள் உள்ளன. 1700 பக்கங்கள் வெறும் பேப்பராகவே உள்ளன.நான் கேட்ட தகவலுக்கு முழுமையாக ஆவண நகல் வழங்கவில்லை. தகவல் அறியும் உரிமை சட்டத்தில், ஒரு பக்கத்தை நகல் எடுக்க அதிகபட்சம், இரண்டு ரூபாய் மட்டுமே செலவாகும். எந்த அடிப்படையில், ஐந்து ரூபாய் கேட்டனர் எனத் தெரியவில்லை. தவிர 488 பக்கங்களை அனுப்பவே இல்லை. இதிலிருந்தே, ஏரி ஊழலில் அதிகாரிகளுக்கும் தொடர்பு இருப்பது தெளிவாகிறது. ஆட்சியர் இந்த விவகாரத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்று சீனிவாசன் அவர் கூறினார்.

**ஆதாரம்: தினமலர், 3.10.2012**

# கிராம ஊராட்சிகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் செய்யப்படும் செலவுகளுக்கு பட்டயக் கணக்காளரின் (CA) சான்றிதழை இணைக்க வேண்டும்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் செய்யப்படும் செலவுகளுக்கு, கிராம ஊராட்சிகள், ஒரு பட்டயக் கணக்காளரின் சான்றிதழை இணைக்க வேண்டும் என்பதை மத்திய அரசு கட்டாயமாக்கியுள்ளது.

மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் மே மாதம் 15ம் தேதி, ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்தும் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் ரூ.18–19 லட்சம் பெறுகிறது. அந்தத் திட்டத்தின் கீழ் செய்யப்படும் செலவுகள் கண்டிப்பாக ஒரு பட்டயக் கணக்காளரால் சான்றிதழ் அளிக்கப்பட வேண்டும். அந்த பட்டயக்கணக்காளர் அரசின் தணிக்கைக் குழு (CAG) வால் பட்டியலிடப்பட்ட தணிக்கையாளரில் ஒருவராக இருக்க வேண்டும். இவற்றுள் 10–15 சதவீதம் நேரிடையாக சரிபார்க்கப்படும்.

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் செயல்பாடு குறித்த தணிக்கையை மேற்கொள்ள CAG கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன் அறிக்கை நவம்பர் மாதம் வெளிவரும். நக்சல் தீவிரவாத பாதிப்பு உள்ள மாவட்டங்களுக்குக் கூடுதல் பணம் அளிப்பது துவக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

கேரளா, ஆந்திரா, ராஜஸ்தான், மிசோரம், அந்தமான் நிகோபார், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களில் குறைந்தபட்ச கூலிச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளதைவிட குறைவான கூலியே இந்தத் திட்டத்தில் பணிபுரிபவர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த இடைவெளியை நிரப்ப, தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் அல்லது குறைந்தபட்ச கூலிச் சட்டம் ஆகிய ஏதாவது ஒன்றில் திருத்தம் கொண்டு வரலாம் என்று அரசு கருதுவதாகவும் அவர் கூறினார்.

பிஹார், ஜார்க்கண்ட் மற்றும் ஒடிஷா ஆகிய மாநிலங்களில் நிலவும் வறுமை நிலைகேற்ப தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை அமல்படுத்துவதற்கான செயல்திட்டம் எதுவும் உறுதி செய்யப்படவில்லை என்றும் அமைச்சர் கூறினார். தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தேவையை உருவாக்காததற்கான காரணம், தாமதமான கூலி என்பதை ஒப்புக்கொண்ட அமைச்சர், ஆனால், சில மாநிலங்களில் கூலி, நேரடியாக பணமாக வழங்கப்படுவது உள்ளிட்ட சரி செய்யும் நடவடிக்கைகள் கூடுதலாக எடுக்கப்படுவதாகவும் கூறினார். 2011–12 ஆண்டில் இந்தத் திட்டத்தின்கீழ் செய்யப்பட்ட மொத்த செலவு ரூ.37,303.30 கோடியாகும். இது 2010–11ல் ரூ.39,377.30 கோடியாகும்.

**ஊராட்சிகளின் திறன் வளர்ச்சிக்கான உதவி:**

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் அரசியல் சாசன சட்டத்தில் குறிப்பிட்டுள்ள அதிகாரங்களை ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும் என்று பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் கேட்டுக்கொண்டது என்று 17 ஏப்ரல், அன்று மாநிலங்களவையில் (ராஜ்ய சபா) மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் ராஜ் V.கிஷோ சந்திர டியோ தெரிவித்தார்.

பஞ்சாயத்துகளின் திறன் வளர்ச்சிக்காக, மாநிலங்களுக்கு ராஷ்டிரிய கிராம ஸ்வராஜ்யோஜனா (RGSY), பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான நிதி (BRGF), பஞ்சாயத்து மகிளா ஈவம் யுவசக்தி அபியான் (PMEYSA) போன்ற திட்டங்களின் மூலம் மத்திய அமைச்சகம் உதவி அளித்துள்ளது. பிற்படுத்தப்பட்ட பகுதி மேம்பாட்டு நிதி (BRGF)யின் கீழ் அடித்தட்டு அளவிலான திட்டமிடலின்

அடிப்படையில் 250 பின்தங்கிய மாவட்டங்களுக்கு உள்ளூர் உள்கட்டமைப்பில் உள்ள சீரிய இடைவெளிகளை சரிசெய்வதற்கு மாநிலங்களின் வழியாக பஞ்சாயத்துக்களுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது.

பஞ்சாயத்து அதிகாரத்துவம் மற்றும் பொறுப்புடைத் தன்மை ஊக்கத் திட்டத்தின் (PEALS) மூலம் மத்திய அமைச்சகம், நிதி, பணியாளர்கள் ஆகியவற்றை ஊராட்சிகளுக்கு வழங்கிய மாநிலங்களுக்கு ஊக்கத்தொகை அளித்துள்ளது. சிறப்பான செயல்பாட்டிற்காக பஞ்சாயத்துக்களுக்கும் ஊக்கத்தொகை அளித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஊரக வளர்ச்சி மற்றும் குடிதண்ணீர் மற்றும் சுகாதாரத்திற்கான மத்திய அமைச்சர், ஊரக வளர்ச்சிக்காக ஒதுக்கப்படும் நிதியில் 1% பஞ்சாயத்துக்களை பலப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட வேண்டும் என்ற ஆலோசனையை திட்டக் கமிஷனுக்குத் தெரிவித்துள்ளதாகவும் கூறினார். திட்டக் கமிஷனுடனான விவாதம் நடந்து கொண்டிருக்கிறது.

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் எந்த வேலைக்கு முன்னுரிமை தருவது என்பது பற்றி கிராமப் பஞ்சாயத்துக்கள் முடிவு செய்ய வேண்டும்.

மே மாதம் 8ம் தேதியன்று, விரிவுபடுத்தப்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை மத்திய அரசு அறிவித்தது. அதன்படி 30 புதிய அனுமதிக்கப்பட்ட வேலைகளை மேற்கொள்ளலாம்.

எந்த வேலைகளுக்கு முன்னுரிமை அளித்துச் செய்யலாம் என்பதை முடிவு செய்யும் அதிகாரம் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கே அளிக்கப்பட்டுள்ளது. மாநிலங்களின் தேவைகள் மற்றும் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு முதலிடம் கொடுப்பதே இதன் நோக்கம் என்று அந்த அறிவிப்பாணையை பாராளுமன்றத்தில் அளித்த மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் மற்றும் திட்டக் கமிஷன் உறுப்பினர் மிஹிர் ஷா கூறினர்.

கிராம சபையில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் பஞ்சாயத்து எல்லைக்குள் எந்த வேலையையாவது எடுத்துச் செய்வதற்குக் கிராம பஞ்சாயத்திற்கு மட்டும் அதிகாரம் உண்டு. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட அட்டவணை முன்னுரிமை அளிக்க வேண்டிய வேலைகள் என்று பட்டியலிட்டுள்ள வேலைகள் மட்டுமல்லாமல் எந்த வேலையை செய்யலாம் என்று கிராமப் பஞ்சாயத்து முடிவு செய்யலாம்.

கிராமப் பஞ்சாயத்து அளவில், இந்தத் திட்ட வேலைகளில் 60 சதவீதம் வேலைக்காகவும் 40 சதவீதம் பொருட்களுக்காகவும் செலவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதனால் வேலைப் பளு குறைவான வேலைகளை எடுத்துக் கொள்ள வாய்ப்பு கிடைக்கும்.

சமவெளிகள் மற்றும் மலைகளில் நீர்த்தேக்கம் அமைப்பது, மாட்டு சிறுநீரிலிருந்து தயாரிக்கப்படும் பூச்சிக் கொல்லிகள் மற்றும் திரவ பயோ உரங்கள் சேமித்து வைத்தல் உள்ளிட்ட விவசாயம், மீன்வளம், வெள்ளங்கள், பாசனம், குடிதண்ணீர் மற்றும் சுகாதாரம் மற்றும் கடலோரப் பகுதிகளில் உள்ள பிற வேலைகள் போன்றவை தொடர்பான வேலைகளுக்கு புதிய பட்டியல் முக்கியத்துவம் அளிக்கிறது. பிஹார், சட்டிஸ்கர், கேரளா, மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் சிக்கிம் ஆகிய தனக்கே உரிய புவியியல் ரீதியான பிரச்சனைகளைக் கொண்ட மாநிலங்கள் இத்தகைய வேலைகளைக் கேட்கின்றன.

தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தில் ஒரு கழிப்பறைக் கட்டுவதற்கானத் தொகை ரூ.4,500 வழங்கப்பட்டு வந்திருந்தது. இப்பொழுது ரூ.9,900 மதிப்பீட்டில் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள தொகை சுகாதாரத்திற்கான பிரச்சாரத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து எடுத்துக் கொள்ளப்படும்.

**ஆதாரம்: – பஞ்சாயத் ராஜ் அப்டேட், ஜூன் 2012**



*கற்பி!* *ஒன்றுசேர்!* *புரட்சி செய்!*

# தமிழ்நாடு தலித் உள்ளாட்சி மன்ற தலைவர்கள் கூட்டமைப்பு


**மணமை கிராமம் & அஞ்சல், திருக்கழுக்குன்றம் வட்டம்**
**காஞ்சிபுரம் மாவட்டம், Email: tdppted@gmail.com**



**திரு. M.P. வீராசாமி**
தலைவர்
மணமை ஊராட்சி
திருக்கழுக்குன்றம் ஒன்றியம்
காஞ்சிபுரம் மாவட்டம்

**திருமிகு. R. டில்லியம்மாள்**
செயலாளர்
அம்மணம்பாக்கம் ஊராட்சி
சித்தாமூர் ஒன்றியம்
காஞ்சிபுரம் மாவட்டம்

**திருமிகு. S. சிவலிங்கம்**
பொருளாளர்
சிறுங்குன்றம் ஊராட்சி
திருப்போரூர் ஒன்றியம்
காஞ்சிபுரம் மாவட்டம்

**செயற்குழு உறுப்பினர்கள்**

திருமிகு. **திலகவதி ஆனந்தன்,**
துணை தலைவர்

திருமிகு. **லதா,**
துணை செயலாளர்

திரு. **தனசேகரன்**
திருமிகு. **கோமளாகுமார்**
திருமிகு. **ஆனி**
திரு. **நடராஜன்**
திரு. **கந்தசாமி**
திருமிகு. **மல்லிகா**
திருமிகு. **ஜோதி**
திரு. **மகாதேவன்**
திருமிகு. **கன்னியம்மாள்**
திரு. **வெங்கடேசன்**
திருமிகு. **சரசு முனியன்**
திரு. **தேவராஜ்**
திருமிகு. **அமுல் பிரேமாவதி**
திருமிகு. **யசோதா வேணுகோபால்**
திருமிகு. **அமுதா பச்சையப்பன்**
திரு. **எல்லப்பன்**
திருமிகு. **ஈஸ்வரி கௌசிகன்**
திருமிகு. **முனியம்மாள்**
திரு. **அருள்**
திருமிகு. **பார்வதி**
திருமிகு. **செல்வி**
திரு. **குமார்**


**9.8.2012**

**பெறுநர்:**

நீதிபதி K.G. பாலகிருஷ்ணன்
மாண்புமிகு ஆணையர்
தேசிய மனித உரிமை ஆணையம் (NHRC)
புதுதில்லி

**பொருள்:** தலித் ஊராட்சித் தலைவர்கள் சந்தித்து வரும் நிர்வாக ரீதியான சவால்கள் மற்றும் சாதிய ரீதியான பாகுபாடுகளுக்கு எதிராக முறையான நடவடிக்கைகள் எடுக்கக் கோரி மற்றும் சிறப்பு உட்கூறுத்திட்ட நிதியை (SCP) தலித் மக்களின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு மட்டும் முறையாக பயன்படுத்திட நடவடிக்கை எடுக்கக் கோரி

**மதிப்பிற்குரிய நீதிபதி அவர்கள்,**

மனித உரிமை மீறல்களுக்கு எதிரான பொது விசாரணையை தமிழ்நாட்டில் நடத்தியதற்காக தலித் ஊராட்சி மன்றத் தலைவர்கள் கூட்டமைப்பு சார்பாக நன்றி கூறுகிறோம்.

தமிழ்நாட்டில், சாதாரண தலித்துகள் மட்டுமல்லாமல், தலித் ஊராட்சித் தலைவர்களும் ஆதிக்க சாதியினர் மற்றும் அரசாங்க அலுவலர்களால் அதிக அளவிலான சாதி ரீதியான பாகுபாடுகளையும் நிர்வாக ரீதியான சவால்களையும் சந்தித்து வருகின்றனர்.

தலித் ஊராட்சிகளுக்கு நிதி மற்றும் திட்டங்களை ஒதுக்குவதில் சாதி ரீதியான பாகுபாடு நிலவுவதால், தலைவர்கள், அவர்களின் நிர்வாகக் கடமைகளை சுதந்திரமாக செய்ய முடிவதில்லை.

கீழ்கண்ட கோரிக்கைகளின் மீது முறையான நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு அரசை வலியுறுத்த வேண்டும் என்று தலித் உள்ளாட்சி மன்றத் தலைவர்கள் கூட்டமைப்பு சார்பாக தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## கோரிக்கைகள்:

- தலித் உள்ளாட்சி மன்றத் தலைவர்களுக்கு எதிரான சாதியப் பாகுபாடுகள் மற்றும் நிர்வாக ரீதியான சவால்களை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

- தலித் ஊராட்சிகளுக்கான வளர்ச்சித் திட்டம் திட்டமிடப்படும்போது தலித் உள்ளாட்சித் தலைவர்கள் பங்கேற்பதை உறுதி செய்ய வேண்டும்.



*கற்பி!* *ஒன்றுசேர்!* *புரட்சி செய்!*

# தமிழ்நாடு தலித் உள்ளாட்சி மன்ற தலைவர்கள் கூட்டமைப்பு

**மணமை கிராமம் & அஞ்சல், திருக்கழுக்குன்றம் வட்டம்**
**காஞ்சிபுரம் மாவட்டம், Email: tdppted@gmail.com**

**திரு. M.P. வீராசாமி**
தலைவர்
மணமை ஊராட்சி
திருக்கழுக்குன்றம் ஒன்றியம்
காஞ்சிபுரம் மாவட்டம்

**திருமிகு. R. டில்லியம்மாள்**
செயலாளர்
அம்மணம்பாக்கம் ஊராட்சி
சித்தாமூர் ஒன்றியம்
காஞ்சிபுரம் மாவட்டம்

**திருமிகு. S. சிவலிங்கம்**
பொருளாளர்
சிறுங்குன்றம் ஊராட்சி
திருப்போரூர் ஒன்றியம்
காஞ்சிபுரம் மாவட்டம்

**செயற்குழு உறுப்பினர்கள்**

திருமிகு. **திலகவதி ஆனந்தன்,**
துணை தலைவர்

திருமிகு. **லதா,**
துணை செயலாளர்

திரு. **தனசேகரன்**
திருமிகு. **கோமளாகுமார்**
திருமிகு. **ஆனி**
திரு. **நடராஜன்**
திரு. **கந்தசாமி**
திருமிகு. **மல்லிகா**
திருமிகு. **ஜோதி**
திரு. **மகாதேவன்**
திருமிகு. **கன்னியம்மாள்**
திரு. **வெங்கடேசன்**
திருமிகு. **சரசு முனியன்**
திரு. **தேவராஜ்**
திருமிகு. **அமுல் பிரேமாவதி**
திருமிகு. **யசோதா வேணுகோபால்**
திருமிகு. **அமுதா பச்சையப்பன்**
திரு. **எல்லப்பன்**
திருமிகு. **ஈஸ்வரி கௌசிகன்**
திருமிகு. **முனியம்மாள்**
திரு. **அருள்**
திருமிகு. **பார்வதி**
திருமிகு. **செல்வி**
திரு. **குமார்**

- தலித் மக்களுக்கான சிறப்பு உட்கூறுத்திட்ட நிதி தலித் மக்களின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு மட்டும் செலவு செய்யப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும்.

- சிறப்பு உட்கூறுத்திட்ட நிதியில் 30 சதவீதம் தலித் உள்ளாட்சிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும்.

- சிறப்பு உட்கூறுத்திட்ட நிதி முறையாக செலவிடப்படுவதை கண்காணிக்க மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு அமைக்கப்பட வேண்டும்.

- சிறப்பு உட்கூறுத்திட்ட நிதி வேறு எந்த பொது வளர்ச்சித் திட்டங்களுக்கும் செலவு செய்யப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட வேண்டும்.

- சிறப்பு உட்கூறுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த சட்ட ரீதியான பாதுகாப்பு அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும்.

தேவையான நடவடிக்கை எடுப்பீர்கள் என்று நம்புகிறோம்.

நன்றி
தங்கள் உண்மையுள்ள
M.P. வீராசாமி
மாவட்டத் தலைவர்
மணமை பஞ்சாயத்து
திருக்கழுகுன்றம் ஒன்றியம்

# நலிந்த பிரிவைச் சேர்ந்த ஊராட்சித் தலைவர்கள் கிராம மக்களுக்குப் புதிய நம்பிக்கையைத் தருகிறார்கள்.

– பாரத் டோக்ரா

2010 நவம்பரில் நடந்த ஊராட்சித் தேர்தலின்போது உத்திரப்பிரதேச மாநிலம், பாண்டா மாவட்டத்தைச் சேர்ந்த நனரனி வட்டம் பலரது கவனத்தை ஈர்த்தது. ஏனென்றால், மிகவும் ஏழைகள் உள்ளிட்ட நலிந்த பிரிவைச் சார்ந்த சில வேட்பாளர்கள், மிகுந்த அதிகாரமுள்ள நிலப்பிரபுக் குடும்பத்தைச் சேர்ந்த வேட்பாளர்களைத் (அல்லது அவர்களின் பினாமி வேட்பாளர்கள்) தோற்கடித்தனர். இந்த ஒரு வட்டத்தில் மட்டும் 6 அல்லது 7 நபர்கள் இத்தகைய முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஊராட்சித் தேர்தலுக்கு மிகக் குறைந்த அளவில் செலவு செய்து நலிந்த பிரிவைச் சேர்ந்த இந்த வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர். அவர்கள் தோற்கடித்த பணக்கார வேட்பாளர்கள் லட்சக்கணக்கில் செலவு செய்தனர்.

பெரும் பண பலம், ஏழை மக்களின் ஒற்றுமையால் தோற்கடிக்கப்படுமானால், அடித்தட்டு ஜனநாயகத்திற்கு இது ஒரு நல்ல செய்தியாகும். இந்தச் சாதனையின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து நிலப்பிரபுத்துவம் ஆதிக்கம் செலுத்தும் இடத்தில் இத்தகைய வரவேற்கத்தகுந்த வளர்ச்சியை "பஞ்சாயத்து ராஜ் அப்டேட்" குறிப்பிடுகிறது. அந்தப் பகுதிக்குச் சென்றபோது, வித்யாதாம் சமிதி என்ற உள்ளூர் தன்னார்வ அமைப்பு நடத்திய வாக்காளர்கள் விழிப்புணர்ச்சிப் பிரச்சாரம் இத்தகைய சாதனைக்கு முக்கியக் காரணம் என்பது தெரியவந்தது.

அந்த நிறுவனம், நரைன் வட்டாரத்தில் பல ஆண்டுகளாக நலிந்த பிரிவினரின் உரிமைக்காக உண்மையாக வேலை செய்து வருவதால், இவர்களின் கருத்து கிராம மக்களால் மிகுந்த மரியாதையுடன் கேட்கப்பட்டது. மேலும், அவர்களது ஜனநாயக உரிமையை நிலைநிறுத்தவும், வாக்கை மிகுந்த கவனமாகப் பயன்படுத்தவும் கற்றுக் கொண்டனர். இந்த முறை, ஏழை மக்களின் பிரச்சனைகளுக்காக துணை நிற்பார்கள் என்று அவர்கள் கருதிய வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவிக்க அதிக அளவிலான எண்ணிக்கையில் முன்வந்தனர். இந்தச் செயலுக்காக பல சவால்களையும் சந்திக்க அவர்கள் தயாராக இருந்தனர்.

வித்யா தம் சமிதியின் செயலாளர், ராஜ்ய பையா, டில்லியைச் சார்ந்த ALG; நிறுவனமும், ABSSS என்ற பிரபலமான உள்ளூர் நிறுவனமும் இணைந்து ஊராட்சித் தேர்தலுக்கு முன்னர் நடத்திய தேர்தல் பற்றிய மாநாடு எங்களைப் போன்ற சமூக ஆர்வலர்களுக்கு வாக்காளர்கள் விழிப்புணர்ச்சிப் பிரச்சாரம் பற்றித் திட்டமிடுவதற்கு உதவியாக இருந்தது. இந்த மாநாட்டில் அளித்த சுவரொட்டிகள் (போஸ்டர்ஸ்) வாக்காளர் உரிமையை நிலைநிறுத்தல், நியாயமான சுதந்திரமான தேர்தல் குறித்தும் கருத்துக்களை மக்களுக்குத் தெரிவிக்க உதவியாக இருந்தது" என்று கூறினார்.

பணபலம் மற்றும் அதிகார பலத்திற்கு எதிராக நடந்த நலிந்த பிரிவு வேட்பாளர்களின் வெற்றி என்பது அதனளவிலேயே மிக நல்ல செய்தியாகும். இருந்தாலும் இத்தகைய நலிந்த பிரிவிலிருந்து வந்த புதிய ஊராட்சித் தலைவர்களின் செயல்பாடு எப்படி இருக்கும் என்பது ஒரு முக்கியக் கேள்வியாகும். பலவித சவால்கள் மற்றும் பயங்கள் இருந்தாலும் இந்தப் புதிய தலைவர்களின் பின்னால் அணிவகுத்து நின்ற கிராம மக்கள் குறிப்பாக நலிந்த பிரிவினரின் நம்பிக்கைகளுக்கு ஏற்றவாறு இந்தப் புதிய ஊராட்சித் தலைவர்கள் செயல்பட வேண்டும் என்பது மிக முக்கியம். அடித்தட்டு ஜனநாயகத்தை நீடிக்கச் செய்ய இது அவசியம்.

இதற்கு மாறாக, இந்தத் தலைவர்கள் சரியாகச் செயல்படவில்லை என்றால், முந்தைய சாதனைகளைக் கூட அது மோசமாகப் பாதிக்கும். மேலும், தாங்கள் நம்பிக்கையோடு தேர்ந்தெடுத்த வேட்பாளர்கள், ஊழல் மற்றும் பொறுப்பில்லாத, முன்னாள் தலைவர்களைப் போல செயல்படுவதாக இந்தக் கிராம மக்கள் நினைக்க ஆரம்பித்து விடுவார்கள்.

கிடைத்த தகவலின்படி, நல்ல செய்தி என்னவென்றால் இதுவரை மேற்குறிப்பிட்ட அபாயம் தவிர்க்கப்பட்டி–ருக்கிறது. நலிந்த பிரிவைச் சேர்ந்த புதிய தலைவர்கள் சிறப்பாகச் செயல்படுகிறார்கள். அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்பை உணர்ந்து செயல்படுகிறார்கள். அந்தப் பகுதிக்கு சென்றபோது, கிராம மக்கள், சமூகச் செயல்பாட்டாளர்கள், இந்த ஊராட்சித் தலைவர்கள் ஆகியோருடன் பேசியபோது கிடைத்த தகவலின்படி, இந்தப் புதிய ஊராட்சித் தலைவர்கள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் ஊராட்சிப்

பணிகளில் அவர்கள் பின்பற்றுகிற நடைமுறைகள் ஆகிய இரண்டிலும் ஒரு நல்ல முன் மாதிரியை உருவாக்குகின்றனர். வித்யாதம் சமிதியின் உதவியோடு, ஊராட்சிப் பணிகளில் ஊழல் மற்றும் லஞ்சத்தின் பிடியை பலவீனப்படுத்துவதில் ஒரு குறிப்பிட்ட அளவு அவர்கள் வெற்றியடைந்துள்ளனர்.

ஊழல் முழுவதுமாக ஒழிக்கப்படவில்லை என்றாலும், ஓரளவிற்கு குறைக்கப்பட்டுள்ளது. மிகவும் விழிப்போடு உள்ள சமூகச் செயல்பாட்டாளர்கள் உதவுவதால், இந்தப் புதிய ஊராட்சித் தலைவர்களைக் கட்டாயப்படுத்தவோ, சமாதானம் செய்யவோ முடியாது என்பதை ஊழல் சக்திகள் புரிந்துகொள்ளும்போது, இத்தகைய ஊழல்கள் குறைந்துவிடும். நாக்ரி கிராம ஊராட்சித் தலைவராக புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட லாலாராமிற்கு ஒரு கல்லூரி மாணவன் உள்ளிட்ட நலிந்த பிரிவைச் சார்ந்த பிற வார்டு உறுப்பினர்களின் உதவி கிடைக்கிறது. அவர் தேசிய ஊரக வளர்ச்சித் திட்டம், நில சமன்பாடு, நிலத்தைச் சீர் செய்தல் உள்ளிட்டவைகளை முறையாக அமல்படுத்தியுள்ளார். பள்ளிக் கட்டிடம் ஒன்று மறுகட்டமைக்கப்பட்டது. சாலை அமைக்கும் பணி செய்யப்பட்டது.

கிராமத்தில் உள்ள ராஜாராம் நம்மிடையே பேசும்போது, “வளர்ச்சிப் பணிகள் முறையாக மற்றும் முன்னேற்றத்தோடு நடைமுறைப்படுத்தப்படுவதால், சுரண்டப்பட்ட நிலையில் கிராம மக்கள் வேலைக்காக வேறு இடங்களுக்கு குடிபெயர்வது குறிப்பிட்ட அளவு குறைந்துள்ளது. முன்னர், உள்ளூர் அளவிலான வாய்ப்புகள் குறைவாக இருந்ததால், ஒப்பந்தக்காரர்கள் பெரிய டிரக்குகளைக் கொண்டு வந்து, அதில் அதிக அளவிலான கிராமத்தினர் ஆடு மாடுகளைப் போல திணிக்கப்பட்டு, குறைந்த அளவிலான கூலிக்கு தொலைவான இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்” என்று கூறினார்.

பிகர்கா ஊராட்சியில், மங்கல்சிங் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து நிலப்பிரபுத்துவ சக்திகள் குறிப்பிட்ட அளவிற்கு பலவீனமடைந்துள்ளன. மோதிலால், ரஜாபாய், சாவித்திரி என்ற இரண்டு தலித் பெண்கள் உள்ளிட்ட பிற வார்டு உறுப்பினர்களும் எழுச்சி அடைந்துள்ளனர்.

முன்னதாக, வித்யாதம் சமிதியின் உதவியோடு ஏழை மற்றும் நிலமற்ற குடும்பங்களில் பலரும் நிலப்பட்டா பெற முடிந்தது. ஆனால், அவர்களால் அந்த நிலத்தில் பயிரிடமுடியவில்லை. தற்போது பஞ்சாயத்தின் உதவியால் இந்த நிலம் விளைச்சல் நிலமாக மாற்றப்பட்டு அவர்களால் பயிரிட முடிகிறது. புகாரி பஞ்சாயத்தின் புதிய தலித் தலைவரான கிலியா அஹிர்வார் பஞ்சாயத்து மற்றும் உள்ளூர் அரசியலில் அதிகாரமுள்ள சிலரின் தலையீட்டை வெற்றிகரமாக முறியடித்துள்ளார். அதன் தொடர்ச்சியாக, இந்தப் புதிய பஞ்சாயத்துத் தலைவர், மக்கள் பங்கேற்பையும், அவர்கள் கலந்துரையாடுவதையும் உறுதிப்படுத்த மாதாமாதம் முறையாக கிராம சபைக் கூட்டங்களைக் கூட்டுகிறார். சிறு விவசாயிகளின் உற்பத்தித்திறன் முன்னேற்றம் அடையும் வகையில் நிலச் சீரமைப்பு பணி செய்யப்பட வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தினார்.

பர்கோலா பஞ்சாயத்தில் மிக மோசமாக புறக்கணிக்கப் பட்ட கேவத் சமூகம், அவர்களின் பொதுவான வேட்பாளர் ராஜ்குமார் யாதவைக் கடுமையான பல தடைகளைத் தாண்டி தேர்தலில் வெற்றி பெற வைத்ததின் மூலமாக பிற நலிந்த பிரிவினரோடு இணைந்து தங்கள் உரிமையை நிலைநாட்டியுள்ளது. அவர் நலிந்த பிரிவினரின் நம்பிக்கைக்கு ஏற்றவாறு உள்ளார். சிறு விவசாயிகளின் நிலச் சீரமைப்பு மற்றும் பாசனத்திற்கு கூடுதல் கவனம் செலுத்தினார். மேலும், வீடில்லாத ஏழைகளுக்கு வீடுகட்ட நிலம் அளித்தார்.

பஞ்சாம்பூர் பஞ்சாயத்தில், ரமேஷ் லோத் அதிகாரம் படைத்த சிலரின் 50 ஆண்டுகால ஆதிக்கத்திற்கு எதிராக வெற்றிகரமாக சவால்விட்டுள்ளார். தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர், ரமேஷ் வளர்ச்சிப் பணிகள் விரைந்து நடைபெறுவதையும் ஓய்வூதியத் தொகை முறையாக அளிக்கப்படுவதையும் உறுதிப்படுத்தினார். கர்த்தலால் பஞ்சாயத்தில் லால் பகதூர் லோத் இதே மாதிரியான சாதனைகளைச் செய்துள்ளார்.

நலிந்த பிரிவினரின் நம்பிக்கை மற்றும் உதவியைப் பெற்றுள்ள இத்தகைய வேட்பாளர்களின் தேர்வுக்குப் பிறகு, கிராம சபைக் கூட்டங்கள் முறையாக நடக்கின்றன. முன்பைவிட அதிகமான மக்களும் கலந்து கொள்கின்றனர். முன்னர், அதிகாரம் படைத்த சிலரின் ஆதிக்கத்தால் கிராமத்தினர் பலர் பஞ்சாயத்திலிருந்து விலகி இருந்தனர். தற்போது அவர்கள் அதிக சுதந்திரத்தோடு பங்கெடுக்கின்றனர்.

பஞ்சாயத்தில் அதிக நம்பிக்கையும் கொண்டுள்ளனர். இவ்வாறுதான் பஞ்சாயத்து ராஜ் அமைப்பு அதன் உண்மையான கடமையை அடித்தட்டு ஜனநாயகத்திற்கு நெருக்கமாக வர முடியும். இத்தகைய முயற்சிகள் இன்னும் அதிக அளவில் தேவைப்படுகின்றது.

**– பஞ்சாயத் ராஜ் அப்டேட், ஜூன் 2012**

# தலித் ஊராட்சிமன்றத் தலைவர் மேல் நடத்தப்பட்ட சாதிய பாகுபாடு

**திருமலாபுரம் ஊராட்சி, தேனி மாவட்டம்.**

**அனுப்புனர்**

செல்வி (40),
க/பெ. ராசய்யா,
திருமலாபுரம் பஞ்சாயத்து தலைவர்,
க.எண்.3–8/60, பெருமாள் கோவில்பட்டி கிராமம்,
குன்னூர் அஞ்சல்,
திருமலாபுரம் கிராமம்,
ஆண்டிபட்டி வட்டம்,
தேனி மாவட்டம்,

**பெறுநர்**

திருமிகு. காவல்துறை இயக்குநர் (DGP),
காவல்துறை இயக்குநர் அலுவலகம்,
டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை,
மயிலாப்பூர்,
சென்னை – 600 004.

ஐயா,

**பொருள்: ஆண்டிப்பட்டி வட்டம் – திருமலாபுரம் பஞ்சாயத்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று ஒதுக்கப்பட்ட ரிசர்வ் பஞ்சாயத்து – இதன் தலைவராக தாழ்த்தப்பட்ட, இந்து பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த நான் பொறுப்பு வகித்து வருவது சாதி இந்துக்களான துணைத் தலைவர் கணேசன் என்பவருக்கும் 4வது வார்டு உறுப்பினர் நாட்டான்துரை என்பவருக்கும் உடன்பாடில்லை – இதனடிப்படையில் நிர்வாக ரீதியாக பல்வேறு இடையூறுகள் கொடுத்து வந்தனர் – தாழ்த்தப்பட்ட பெண் எப்படி பஞ்சாயத்து நிர்வாகம் செய்யலாம், நாங்கள் நிர்வாகத்தைப் பார்த்துக் கொள்கிறோம் – நீ வீட்டில் அமைதியாக இருக்க வேண்டுமென்று கூறி வந்தனர் – பல நேரங்களில் சாதி ரீதியாகவும் ஆபாசமாகவும் பேசி வந்தனர் – கடந்த 30.6.2012 அன்று மேற்குறிப்பிட்ட நபர்களால் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு முன்பாக சாதி ரீதியாக இழிவாகப் பேசப்பட்டு தாக்கப்பட்டேன் – அவமானப்படுத்தப்பட்டேன் – இச்சம்பவம் குறித்து க. விலக்கு காவல் நிலையத்தில் குற்ற எண்.118/2012 பிரிவு 294(b) வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 பிரிவு 3(1)(10) ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு இதுவரை குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை – ஆகவே குற்றவாளிகள் மீது தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 பிரிவு 3(1)(1), 3(1)(12) ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு எனக்கு தகுந்த நீதி, நிவாரணம், பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு கிடைப்பது சம்பந்தமாக...**

நான் மேற்கண்ட முகவரியில் என் கணவர் ராசய்யா (45), மகன்கள் முத்துச்சாமி (20), சௌந்திரராஜன்(18) ஆகியோருடன் வசித்து வருகின்றேன். நான் தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிடர் – இந்து பள்ளர் சமூகத்தைச் சேர்ந்தவள். நான் தற்போது திருமலாபுரம் பஞ்சாயத்துத் தலைவராக உள்ளேன். நானும் என் கணவரும் கல்குவாரியில் தினக்கூலியாக வேலை பார்த்து வருகின்றோம்.

கடந்த 2011ம் ஆண்டு நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தலில் திருமலாபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் பதவிக்கு போட்டியிட்டேன். இப்பஞ்சாயத்தானது 14 கிராமங்களை உள்ளடக்கியதாகும். என்னுடன் சேர்ந்து மொத்தம் 7 பேர் போட்டியிட்டதில் 7 வாக்குகள் வித்தியாசத்தில் நான் வெற்றி பெற்றேன். திருமலாபுரம் பஞ்சாயத்துத் துணைத்

தலைவராக சாதி இந்துவான கள்ளர் சமூகத்தைச் சேர்ந்த திரு.கணேசன் (38) த/பெ. வீரணத்தேவர் என்பவர் உள்ளார். மொத்தம் 3 தாழ்த்தப்பட்ட பட்டியலின் உறுப்பினர்கள் உள்ளிட்ட 9 உறுப்பினர்கள் இப்பஞ்சாயத்தில் உள்ளனர். திருமலாபுரம் பஞ்சாயத்திற்கென்று நிரந்தரமான எழுத்தர் கிடையாது.

திருமலாபுரம் ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களில் சாதி இந்துவான பிரமலைக்கள்ளர் சுமார் 2500 குடும்பங்களாகவும், நாயுடு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சுமார் 150 குடும்பங்களாகவும், தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிடர் – இந்து பள்ளர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சுமார் 600 குடும்பங்களாகவும், தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிடர் – அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சுமார் 50 குடும்பங்களாகவும் வசித்து வருகின்றனர்.

தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த நான் பஞ்சாயத்துத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதை சாதி இந்துவான பஞ்சாயத்து உறுப்பினர் திரு. நாட்டான் துரை த/பெ. சின்ன கல்யாணி தேவர் என்பவருக்கும், அவரது சித்தப்பா மகனும் பஞ்சாயத்தின் துணைத் தலைவருமான திரு. கணேசன் (38) த/பெ.வீரணத்தேவர் என்பவருக்கும் உடன்பாடில்லை. இருவரும் எனக்கு பணி ரீதியாக பல்வேறு இடையூறுகளை செய்து வந்தனர்.

குறிப்பாக 4வது வார்டு உறுப்பினர் திரு. நாட்டான்துரை என்னிடம் ''நீ பஞ்சாயத்து தலைவராக பெயருக்கு இருந்தால் போதும். என் தம்பி கணேசன் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வான். நீ பஞ்சாயத்து அலுவலகத்திற்கு வரவேண்டிய அவசியம் இல்லை. நாங்களே தீர்மானத்தை போட்டுக் கொள்கிறோம். கூட்டத்தை நடத்திக் கொள்கிறோம். உனக்கு என்ன தேவையோ அதையெல்லாம் செய்கிறோம்'' என்று பலமுறை கூறிவந்தார். சில நேரங்களில் மது அருந்திவிட்டு என் வீட்டிற்கு முன்பு நின்று கொண்டு, ''மரியாதையாக உன் நிர்வாகத்தை எல்லாம் என் தம்பி கணேசனிடம் ஒப்படைத்துவிடு. ஆண்டாண்டு காலமாக இப்படித்தான் இப்பஞ்சாயத்தில் இருந்து வந்துள்ளது. பொம்பள நீ. அதுவும் கீழ்ச்சாதியில உள்ள பொம்பள. எவ்வளவு தைரியம் இருந்தால் நாங்கள் சொல்வதை கேட்காமல் நீ கூட்டம் நடத்தலாம். நீ தலைவர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு அதிகாரம் பண்ணுவதை எங்களால் பொறுத்துக் கொள்ள முடியாது. பட்டுச் சேலை கட்டிக்கொண்டு வீட்டில் உள்ள வேலையை மட்டும் பார்'' என்று பேசுவார். சில நேரங்களில் ஆபாசமாகவும் சாதி ரீதியாக இழிவாகவும் பேசுவார்.

அதற்கு நான், ''மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இப்பொறுப்பிற்கு வந்திருக்கிறேன். என்னை இப்படி ஆபாசமாக இழிவாகப் பேசாதீர்கள். என்னை நிர்வாகம் செய்யவிடுங்கள்'' என்று கூறி வந்தேன். ஆனாலும், ''நீ எப்படி நிர்வாகம் செய்வாய் எங்களை மீறி எப்படித் தீர்மானம் போடுவாய் என்பதைப் பார்த்து விடுகிறோம்'' என்றெல்லாம் நிர்வாக ரீதியாக இடையூறு செய்து வந்தார். சில நேரங்களில் ''எங்க சாதியில இருக்கிறவங்களுக்கு மட்டும்தான் பஞ்சாயத்து நிர்வாகம் செய்ய தைரியமும் திமிரும் இருக்கும். உங்களுக்கெல்லாம் அது இருக்காது'' என்றெல்லாம் இழிவாகப் பேசி வந்தார்.

இதுமட்டுமல்லாமல் பஞ்சாயத்துத் துணைத் தலைவரும் சாதி இந்துவுமான திரு. கணேசன் என்பவரும் என்னிடம், ''எல்லாம் எனக்குத் தெரியும். நான் சொல்வதைக் கேட்டு அமைதியாக இருக்க வேண்டும். நீ பஞ்சாயத்து அலுவலகத்திற்கு வரவேண்டாம். நானே எல்லாவற்றையும் பார்த்துக் கொள்கிறேன்'' என்று கூறிவந்தார்.

இந்நிலையில் 4வது வார்டு உறுப்பினரான நாட்டான்துரை எனக்கு எதிராக திருமலாபுரம் பஞ்சாயத்தில் சரிவர கூட்டம் நடத்தப்படவில்லை என்று பொய்ப் புகார் அனுப்பியுள்ளார். இதனடிப்படையில் கடந்த 30.6.2012 அன்று காலை சுமார் 10.30 மணியளவில் ஆண்டிப்பட்டி துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. திருப்பதி அவர்கள் திருமலாபுரம் பஞ்சாயத்திற்கு நேரடியாக வந்து ஆய்வு மேற்கொண்டார். அப்போது துணைத் தலைவர் திரு. கணேசன், உறுப்பினர் நாட்டான்துரை உள்ளிட்ட அனைவரும் இருந்தனர். பஞ்சாயத்தில் 6 கூட்டங்கள் நடத்தப்பட்ட தீர்மானக் குறிப்பேட்டை நான் துணை வட்டார வளர்ச்சி அலுவலரிடம் எடுத்துக் காண்பித்தேன். அதற்குத் துணை வட்டார வளர்ச்சி அலுவலர், சொந்த விருப்பு வெறுப்பிற்காக புகார் கொடுக்கக்கூடாது. இதுபோன்ற புகார்கள் இல்லாமல் ஒற்றுமையாக பஞ்சாயத்துப் பணியினை செயல்படுத்துங்கள் என்று கூறிவிட்டுச் சென்றார்.

இதன் தொடர்ச்சியாக 30.6.2012 அன்றே மதியம் சுமார் 1.00 மணியளவில் பஞ்சாயத்துப் பணிகளை முடித்துவிட்டு, அலுவலகத்தைப் பூட்டிவிட்டு வெளியே வந்தேன். அப்போது 4வது வார்டு உறுப்பினரும் சாதி இந்துவான திரு. நாட்டான்துரை என்பவர் என்னைப் பார்த்து, ''ஏண்டி பள்ள நாயே, நீயெல்லாம் பஞ்சாயத்துத் தலைவரா ? உனக்கு கீழே நாங்க வேலை பார்க்கணுமா ? ஒழுங்காக தலைவர் பதவியை விட்டு ஓடி விடு. நாங்க இந்த பஞ்சாயத்து நிர்வாகத்தை நடத்துகிறோம்'' என்று கூறியது மட்டுமல்லாமல் ஆபாசமாகவும் இழிவாகவும் பேசி என்னைத் தாக்கினார். கீழே பிடித்து தள்ளிவிட்டார். மறுபடியும் தாக்க முயற்சி செய்தார். இதைக் கண்டதும் என் மகன் முத்துச்சாமி ஓடி வந்து நாட்டான் துரையை

தடுத்து, ''எப்படி நீங்கள் எங்கள் அம்மாவைத் தாக்கலாம்'' என்று கேட்டான். அதற்கு துணைத் தலைவர் கணேசன் என்னைப் பார்த்து, ''இந்த பள்ளச் சிறுக்கி நாய் தலைவராக இருக்கக்கூடாது. நிர்வாகத்திற்கும் பதவிக்கும் தகுதியில்லாதவள். உனக்கு ஏதாவது நிலம் இருக்காடி, இல்ல பணமாவது இருக்காடி எவ்வளவு நாள் எங்க முன்னாடி தைரியமா நாற்காலியில் உட்காருவ'' என்று கூறிக்கொண்டே என் கழுத்தை பிடித்துத் தள்ளிவிட்டு சேலையை பிடித்து இழுத்து தாக்கினார். இச்சம்பவம் பொது மக்கள் முன்னிலையில் நடந்தது.

இதன்பின்னர் சம்பவம் நடந்த 30.6.2012 அன்று மதியம் சுமார் 1.30 மணியளவில், நடந்த சம்பவம் குறித்து க.விலக்கு காவல்நிலையத்திற்கு சென்று எழுத்து மூலமாக புகார் கொடுத்தேன். அன்றே ஆண்டிபட்டி காவல் துணை கண்காணிப்பாளர், வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அவர்கள் உள்ளிட்ட அதிகாரிகளைச் சந்தித்து எனக்கு நடந்த வன்கொடுமை குறித்து புகார் மனு கொடுக்கச் சென்றேன். ஆனால், அங்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இல்லாததால் அங்கிருந்த உதவியாளர்களிடம் எழுத்து மூலமாக புகார் கொடுத்தேன்.

நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் மறுநாள் 1.7.2012 அன்று க.விலக்கு காவல்நிலைய குற்ற எண்.118/2012 பிரிவு 294(b) இ.த.ச. மற்றும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 பிரிவு 3(1)(10)ன் கீழ் வழக்கு பதிவு செய்தனர். கடந்த 1.7.2012 அன்று காலை சுமார் 10.00 மணியளவில் எனக்கு உடல் வலி அதிகமாக இருந்ததினால் தேனி அரசு மருத்துவமனையில் உள்நோயாளிகள் பிரிவில் அனுமதிக்கப்பட்டு இன்று வரை சிகிச்சை பெற்று வருகின்றேன். இதற்கிடையில் என் மகன் முத்துச்சாமி 2.7.2012 திங்கட்கிழமை மனுநீதி நாளன்று தேனி மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் நேரில் சென்று எழுத்து மூலமாக புகார் கொடுத்துள்ளான். என் மகன் கொடுத்த புகாரினை பெற்றுக் கொண்ட மாவட்ட ஆட்சியர் உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறியுள்ளார். ஆனால், காவல்துறையினர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்னரும், குற்றவாளிகளை இன்று வரை கைது செய்யவில்லை.

ஆகவே கனம் சமூகம் அவர்கள், தாழ்த்தப்பட்ட இந்து பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த திருமலாபுரம் பஞ்சாயத்து தலைவரான என்னை சாதி ரீதியாக இழிவாகவும், அசிங்கமாகவும் பேசி, பொது இடத்தில் என் சேலையைப் பிடித்து இழுத்து மானபங்கப்படுத்திய சாதி இந்துக்களான பஞ்சாயத்து துணைத் தலைவர் திரு. கணேசன் மற்றும் 4வது வார்டு உறுப்பினர் திரு. நாட்டான்துரை ஆகியோர் மீது தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 பிரிவு 3(1)(11) & 3(1)(2) ஆகியவற்றின் கீழ் கூடுதலாக வழக்கு பதிவு செய்தும், உடனடியாகக் குற்றவாளிகளைக் கைது செய்து பாதிக்கப்பட்ட எனக்கு தகுந்த நீதி, நிவாரணம் மற்றும் பாதுகாப்பு வழங்குமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நாள்: 5.7.2012
இடம்: திருமலாபுரம்

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள,
செல்வி

**ஆதாரம் – Evidence**

# கிராம சபை கூட்டங்கள் வீடியோவில் பதிய உத்தரவு

## கிராம சபைக் கூட்டங்களை, வீடியோவில் பதிய உத்தரவிடப்பட்டுள்ளது.

ஊராட்சிகளின் செயல்பாடு பற்றி மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அரசுத் திட்டங்களுக்கு பயனாளிகளை தேர்வு செய்வதற்கும், கிராம சபைக் கூட்டம் நடத்தப்படுகிறது.

இதில், மொத்த வாக்காளர்களில், 10 சதவீதம் பேர் கலந்து கொள்ள வேண்டும் என உத்தரவு உள்ளது. பெரும்பாலான ஊராட்சிகளில் குறைந்த அளவே மக்கள் கலந்து கொள்வதால், சம்பிரதாயத்திற்காக கிராம சபைக் கூட்டங்கள் நடக்கின்றன.

இந்நிலையில், 500 வாக்காளர் உள்ள இடங்களில், 50 பேர்; 3,000க்குள் இருந்ததால், 100; 5,000க்குள் இருந்தால் 200; 10 ஆயிரத்திற்கு மேல் இருந்தால் 300 பேர் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என, தற்போது உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு கலந்து கொண்டால் மட்டுமே, கிராம சபை தீர்மானங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இதனால், கூட்டங்களை வீடியோவில் பதிய உத்தரவிடப்பட்டுள்ளது.

**ஆதாரம்:** தினமலர் 22.7.2012

# காட்டுமிராண்டித் தனங்களிலிருந்து விடுதலை

விருதுநகர் மாவட்டம் கொட்டகச்சியேந்தல் கிராம ஊராட்சித் தலைவர் கருப்பன் தலித் என்பதற்காகத் தான் இழிவுபடுத்தப்படுவதாகவும் ஊராட்சிமன்றக் கூட்டங்களின்போது ஆதிக்கச் சாதியினர் தன்னைத் தரையில் உட்காரவைத்து அவமானப்படுத்துவதாகவும் குற்றம் சுமத்தினார். ஊராட்சித் தலைவர் என்றமுறையில் தன்னால் எவ்விதமான கடமைகளையும் ஆற்ற முடியவில்லை எனவும் ஆதிக்கச் சாதியைச் சேர்ந்த துணைத் தலைவர் ஆர். உமா மகேஸ்வரியின் கணவரும் ஊராட்சி அலுவலக எழுத்தரும் தன்னைப் பணி செய்யவிடாமல் தடுப்பதாகப் புகாரளித்த கருப்பன் அவர்கள் தன்னைத் தொகை நிரப்பப்படாத காசோலைகளில் கையொப்பமிடும்படி நிர்பந்திப்பதாகவும் மன்ற ஆவணங்கள், கணக்குப் புத்தகங்கள் போன்றவற்றைப் பார்வையிடுவதற்குக்கூட அனுமதிப்பதில்லை எனவும் கூறியிருக்கிறார். இதுபற்றி முதல்வரின் சிறப்புப் பிரிவு, தேசிய மனித உரிமைகள் ஆணையத் தலைவர் உள்ளிட்டப் பலருக்கும் புகார் மனு அனுப்பிய கருப்பன் பின்னர் ஆதிக்கச் சாதியினரின் மிரட்டலுக்குப் பயந்து அவற்றை மறுத்திருப்பதாகத் தெரிகிறது.

தமிழகம் முழுக்கத் தலித் பஞ்சாயத்து தலைவர்கள் சந்திக்கும் ஒடுக்கு முறைகள் தொடர் கதைகளாகி வருகின்றன. ஏற்கெனவே நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த தாழையூத்து ஊராட்சி மன்றத் தலைவர் கிருஷ்ணவேணி, சென்னிமலை வள்ளிதெய்வானை ஆகியோர்மீது ஏவப்பட்ட வன்முறைகள் குறித்த செய்திகள் வெளியாகியுள்ளன.

கொட்டகச்சியேந்தல், பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார் மங்களம் ஆகிய நான்கு ஊராட்சிகளிலும் தலித் தலைமையை ஏற்க மறுத்த ஆதிக்கச் சாதியினரின் தலையீடு காரணமாக 1997 முதல் பத்தாண்டுகளுக்கு மேல் உள்ளாட்சித் தேர்தல்களை நடத்த முடியாத நிலை இருந்தது. 2007இல் பல்வேறு தலித் அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள், ஜனநாயக சக்திகளின் தொடர் போராட்டங்களையடுத்து அப்போதைய மதுரை மாவட்ட ஆட்சியர் த.உதயசந்திரனின் முன் முயற்சியோடு தேர்தல்கள் நடத்தப்பட்டன. ஆனால், தலித்துகளின் ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்குத் தேர்தல் வெற்றிகள் தீர்வல்ல என்பதையே கொட்டக்கச்சியேந்தல் ஊராட்சித் தலைவர் கருப்பனின் வாக்குமூலம் சுட்டிக்காட்டியுள்ளது. மேற்குறித்த நான்கு ஊராட்சி அமைப்புகளின் தலைவர்களும் கூட அச்சுறுத்தப்பட்டும் ஒடுக்கப்பட்டும் வருகின்றனர். இதைப் பல்வேறு ஊடகங்களும் மனித உரிமை அமைப்புகளும் பல தருணங்களில் அம்பலப்படுத்தியிருக்கின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் மதுரை, சிவகங்கை மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்த தமிழ்நாடு மகளிர் பஞ்சாயத்துத் தலைவர்கள் கூட்டமைப்பு, தமிழ்நாடு–புதுச்சேரி தலித் பஞ்சாயத்துத் தலைவர்கள் கூட்டமைப்பு ஆகியவை சார்பான உண்மையறியும் குழு தலித் ஊராட்சித் தலைவர்கள் மீது ஆதிக்கச் சாதியினர் தொடுக்கும் தாக்குதல்களைப் பற்றிய பல உண்மைகளை அம்பலப்படுத்தியிருக்கிறது. ஆதிக்கச் சாதிகளைச் சேர்ந்த உறுப்பினர்களிடமிருந்து ஒத்துழைப்புக் கிடைக்கப் பெறாமை, சாதியைச் சொல்லி இழிவுபடுத்துதல், தம் ஜனநாயகக் கடமையை ஆற்ற முற்படும் தலித் ஊராட்சித் தலைவர்களை மிரட்டுதல் குடும்பத்தினருக்கு நெருக்கடியளித்தல் உள்ளிட்ட தலித் தலைவர்கள் மீது தொடுக்கப்பட்டு வரும் வன்முறைகளைப் பற்றி அக்குழுவினர் பல உண்மைகளை அம்பலப்படுத்தியுள்ளனர். பிரதிநிதித்துவ ஜனநாயகம் பற்றிய நம் கற்பனைகளை இவை கலைத்துப் போடுகின்றன. பல கிராமங்களில் பஞ்சாயத்து அமைப்புகளின் எழுத்தர்கள், (பெரும்பாலும் ஆதிக்கச் சாதியினரைச் சேர்ந்தவர்கள்) மக்கள் நலப் பணியாளர்கள் கூட அதிகாரத்தைக் கையிலெடுத்துக் கொள்வதாக வந்துள்ள செய்திகள் அதிர்ச்சியூட்டுகின்றன. தலித்துகளின் முன்னேற்றத்துக்காக அரசால் வழங்கப்படும் சிறப்பு நிதியைத் தலித் பஞ்சாயத்துத் தலைவர்களே கூடத் தலித்துகளுக்காகப் பயன்படுத்தாத நிலை பல கிராமங்களில் நீடித்து வருவதாகவும் உண்மையறியும் குழுவினர் கண்டறிந்துள்ளனர்.

தலித்துகள், பழங்குடியினர், மகளிர் முதலான புறக்கணிக்கப்பட்ட பிரிவினருக்கு உள்ளாட்சி அமைப்புகளில் உரிய பிரதிநிதித்துவமளிக்க வகை செய்யும் 73வது அரசியல் சட்டத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டு முப்பதாண்டுகளுக்குப் பின்னரும் நிலைமை மாறவில்லை என்பது வருத்தமளிக்கும் விஷயம். சமூக ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உரிய அதிகாரம் கிடைக்கப் பெறாமல் ஜனநாயகம் முழுமை பெறமுடியாது என்பதும் கற்பனை செய்யும் வளர்ச்சியை எட்ட முடியாது என்பதும் உண்மை.

உரிய சட்டங்கள் இருந்தும் அவைபோன்ற ஒடுக்குமுறைகளிலிருந்து தலித்துகளைப் பாதுகாக்க முடியாதது பெரும் சோகம். தலித் பஞ்சாயத்துத் தலைவர்கள் மீது ஆதிக்கச் சாதியினரால் தொடுக்கப்படும் இத்தகைய தாக்குதல்கள் தலித் வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் தண்டனைக்–குரியவையாகப் பார்க்கப்பட வேண்டும் எனப் பல்வேறு ஜனநாயக அமைப்புகளும் மனித உரிமை அமைப்புகளும் கோரிவருகின்றன. தலித் தலைவர்களின் புகார்களைப் பரிசீலிக்க வேண்டிய அதிகாரவர்க்கமும் காவல், நீதித்துறையும் இந்த விஷயத்தில் தொடர்ந்து அலட்சியமாக நடந்து வருவது கண்டனத்துக்குரியது.

கொட்டக்காச்சியேந்தல் பஞ்சாயத்துத் தலைவர் கருப்பன் தன் மீதான ஒடுக்குமுறைகள் குறித்துப் புகார் அளித்த இரண்டொரு நாட்களுக்குப் பிறகுஅவர் மீது ஊழல் புகார் எழுப்பப்பட்டது. தன்னையாரும் சாதி ரீதியாக பாகுபடுத்தவில்லை என்று வாக்கமூலம் அளிக்கும்படி அவர் கட்டாயப்படுத்தப்பட்டார். அரசு விழிப்புடன் இருந்து அவரது புகாரை விசாரித்திருந்தால் பல உண்மைகள் அம்பலத்திற்கு வந்திருக்கும்.

பொதுவாகத் தலித்துகளுக்கென்று ஊராட்சிகள் ஒதுக்கப்படும்போது அதைத் தாங்களே தக்கவைத்துக் கொள்ளும் முயற்சியில் ஆதிக்கச் சாதியினர் ஈடுபடுகின்றனர். பதவியை ஏலம் விடுதல், தங்களுக்குப் பணிந்து போகக்கூடிய ஆட்களைத் தேர்ந்தெடுத்துத் தேர்தலில் பங்கெடுக்கச் செய்தல், ஆதிக்கச் சாதியைச் சேர்ந்த துணைத் தலைவரைக் கொண்டு நிர்வாகத்தை நடத்துதல் போன்ற “சட்டத்திற்குட்பட்ட நெறிகளை” கையாளுகின்றனர். இது ஏறக்குறைய ஆதிக்கச் சாதியினரே தேர்தலில் போட்டியிடுவதைப் போன்றதுதான். அதிக அளவில் செலவு செய்து வெற்றிபெற வைக்கப்படும் தலைவர் பின்னர் வெற்றி பெறவைத்தவர்களுக்காகப் பணியாற்ற வேண்டும் என்பதே இதன் அடிப்படை. சாதியைத் தக்கவைத்துக் கொள்வதில் பழைய நடைமுறைகள் தோல்வியடையும் போது புதிய நடைமுறைகளைக் கண்டுபிடித்துச் சாதியை நிலைநிறுத்திக் கொள்கிறார்கள்.

இதுபோன்ற புகார்கள் எழும்போது மட்டுமே இப்பிரச்சனைகளை வெகுசில ஊடகங்களும் அமைப்புகளும் கண்டுகொள்கின்றன. அமைப்புகளும் அரசும் புகார் எழும் இடங்களில் மட்டுமே தலையிட்டுச் சரி செய்துவிட்டால் போதுமானது எனக் கருதுகின்றன. இதனால் புகார் எழும் இடங்களில் மட்டுமே பிரச்சனைகள் இருப்பதான தோற்றம் உருவாகிறது. ஆனால் பிரச்சனைகள் இருந்தும் புகாராக மாறாத இடங்கள் அதிகம். தலித் ஊராட்சிகள் இயங்கும் முறை குறித்த ஆய்வுகளோ கண்காணிப்புகளோ நடைமுறையில் இல்லை. முறையான கண்காணிப்புகளும் ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுவதன் மூலம் ஓரளவுக்குத் தீர்வுகாண முடியும் என்றாலும் சமூக, பண்பாட்டு, அரசியல் தளங்களில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் அதிகம்.

பொதுவாகவே தமிழகத்தில் தலித்துகளுக்கு எதிரான வன்முறைகள் பெருகி வருகின்றன. சமீபத்தில் ஈரோடுமாவட்டம் கொடுமுடி அருகே உள்ள நகப்பாளையம் கிராமத்தில் ஒரு தீண்டாமைச் சுவர் எழுப்பப்பட்டது பற்றிய செய்திகளைப் பார்க்கும்போது மதுரைமாவட்டம் உத்தபுரம் தீண்டாமைச் சுவர் விவகாரங்களிலிருந்து அரசு பாடம் கற்றுக் கொள்ளவில்லை எனத் தெரிகிறது. திருவண்ணாமலை மாவட்டம் ஆடையூர் கிராமத்தில் தலித் குழந்தைகளைப் பஞ்சாயத்துப் பள்ளியில் சேர்த்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சாதி இந்துக்கள் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாமல் நிறுத்தியுள்ளனர். சமீபத்திய ஆய்வுகளில் சில, தமிழகத்தில் கௌரவக் கொலைகள் பெருகி வருவதாகச் சொல்கின்றன. கௌரவக் கொலைகளில் பெரும்பாலானவை தலித்துகளுடனான காதல்–மண உறவை முன்வைத்து ஆதிக்கச் சாதியைச் சேர்ந்தவர்களால் மேற்கொள்ளப்படுபவை. சாதியின் இறுக்கத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் பொருட்டு மேற்கொள்ளப்படும் கௌரவக் கொலைகளைத் தடுப்பதற்கு தலித் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்திற்கு இணையான சிறப்புச் சட்டங்கள் தேவை.

சாதி ஆதிக்கங்களுக்கெதிரான விழிப்புணர்வும் அமைப்புகளின் செயற்பாடுகளும் குறைந்து வருகின்றன. ஊடகங்கள் பெருகியுள்ளபோதிலும் ஆங்கில ஊடகங்கள் தவிரமற்றவை அவற்றைச் செய்தியாகக் கூடப் பதிவு செய்வதில்லை. சாதி இந்துக்களிடம் தீண்டாமை குறித்த பரிசீலனைகளைக் கோரி, அதற்காகப் போராடிய காந்தியோ தலித்துகளின் அரசியல், பொருளாதார உரிமைகளுக்காக சமரசமற்ற போராட்டங்களை முன்னெடுத்த அம்பேத்கரோ இல்லாமல்போனதோடு அவர்களைப் புரிந்து உள்வாங்கிக் கொண்ட அமைப்புகளோ தலைவர்களோ கூட நம்மிடம் இல்லையென்பதுதான் சூழலில் நேர்ந்துள்ள சிக்கல். தீண்டாமை போன்ற காட்டுமிராண்டித் தனங்களிலிருந்து முற்றாக விடுபடாமல் எந்தவொரு சமூகமும் தன்னை நாகரீகமானதாகக் கருதிக்கொள்ள முடியாது. தமிழகத்தில் அயோத்திதாசர், பெரியார் முதலான தலைவர்களின் வெற்றிடங்களை நிரப்பும் பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உண்டு.

**ஆதாரம்: காலச்சுவடு, ஜூன் 2012**

# தலித் ஊராட்சிமன்றத் தலைவர் மேல் நடத்தப்பட்ட வன்கொடுமைகள்

**காட்டாத்தி ஊராட்சி, புதுக்கோட்டை மாவட்டம்**

---

**அனுப்புநர்**
ஜெயந்தி,
க/பெ. அசோக்குமார்,
331–1, காந்தி நகர்,
காட்டாத்தி/ நம்பிவயல் அஞ்சல்,
கரம்பக்குடி தாலுகா 614615
புதுக்கோட்டை மாவட்டம்

**பெறுநர்**
திருமிகு. காவல்துறை இயக்குநர் (DGP),
காவல்துறை இயக்குநர் அலுவலகம்,
டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை,
மயிலாப்பூர், சென்னை – 600 004.

**ஐயா,**

**பொருள்: தாழ்த்தப்பட்ட இந்து ஆதிதிராவிடர் பறையர் சமூகத்தைச் சேர்ந்த பஞ்சாயத்துத் தலைவரான என்னை, துணைத் தலைவர் பாலசுப்பிரமணியன் (30) த/பெ. ராமசந்திரன், 6வது வார்டு உறுப்பினர் ராஜம்மாள் என்பவரின் மகன் செல்வம் (35) த/பெ. நல்லையன் உள்ளிட்ட வன்கொடுமை கும்பல் சாதி ரீதியாக இழிவாகப் பேசுவது, கொலை மிரட்டல் விடுப்பது உள்ளிட்ட பல்வேறு வன்கொடுமைகளில் ஈடுபட்டு வருகின்றனர் – தேசியகொடி ஏற்றுவதற்காக கடந்த 15.8.2012 அன்று ஊராட்சி நடுநிலைப் பள்ளிக்கு சென்ற என்னை தேசிய கொடி ஏற்றவிடாமல் ஆபாசமாக இழிவாகப்பேசி என் மீது கடுமையான வன்கொடுமைகளிலும் ஈடுபட்டனர் – கடந்த 10 மாத காலமாக பஞ்சாயத்துப் பணிகளை நடத்தவிடாமல் பல்வேறு சித்திரவதைகளை செய்து வரும் வன்கொடுமை கும்பல் மீது தகுந்த நடவடிக்கை எடுத்து எனக்கு உரிய நீதி, நிவாரணம், மறுவாழ்வு மற்றும் பாதுகாப்பு வழங்குவது சம்பந்தமாக**

நான் மேற்கண்ட முகவரியில் என் கணவர் அசோக்குமார், மகன்கள் வீரமணி, கதிரவன், தாமிரன், மகள்கள் தேன்மொழி, சர்ஜிகா, அஜய்ஸ்ரீ ஆகியோருடன் வசித்து வருகிறேன். நான் தாழ்த்தப்பட்ட இந்து ஆதிதிராவிடர் – பறையர் சமூகத்தைச் சேர்ந்தவள். எனக்கு வயது 40. காட்டாத்தி ரிசர்வ் பஞ்சாயத்தின் தலைவராக உள்ளேன்.

நான் சார்ந்துள்ள காட்டாத்தி பஞ்சாயத்தில் துணைத் தலைவராக பாலசுப்பிரமணியன் (30) த/பெ. ராமச்சந்திரன் என்பவர் உள்ளார். ஒன்பது உறுப்பினர்கள் கொண்ட காட்டாத்தி பஞ்சாயத்தில் 4 பெண் உறுப்பினர்கள், 5 ஆண் உறுப்பினர்கள் உள்ளனர். 6வது வார்டு உறுப்பினரான ராஜம்மாள் என்பவரின் மகன் செல்வம் (35) த/பெ. நல்லையன் என்கிற சாதி இந்துவும், காட்டாத்தி பஞ்சாயத்தின் துணைத் தலைவர் பாலசுப்பிரமணியன் என்கிற சாதி இந்துவும் நிர்வாக ரீதியாக, சாதிய ரீதியாக பல்வேறு அத்துமீறல்களை என் மீது நடத்தி வருகின்றனர். காட்டாத்தி பஞ்சாயத்துத் துணைத் தலைவர் பாலசுப்பிரமணியன் காசோலையில் கையெழுத்திட மறுப்பது, சாதி ரீதியாக இழிவாகப் பேசுவது, ஆபாசமாக திட்டுவது, பஞ்சாயத்துக் கூட்டங்களில் என்னை நிர்வாகம் செய்யவிடாமல் குறுக்கீடு செய்வது உள்ளிட்ட பல்வேறு வன்கொடுமைகளை என் மீது நடத்தி வருகிறார்.

இதே போன்று 6வது வார்டு உறுப்பினர் ராஜம்மாள் என்பவர் பஞ்சாயத்துக் கூட்டத்திற்கு வராமல் அவரது சார்பாக அவரது மகன் செல்வம் என்பவர் பஞ்சாயத்துக் கூட்டங்களில் கலந்து கொள்வார். பஞ்சாயத்து கூட்டத்தில் எனக்கு எதிராக நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு செருப்புக் கால்களை தூக்கி மேஜை மீது வைத்து என் முகத்திற்கு நேராக கால்களை ஆட்டுவார். அதுமட்டுமல்லாமல் பல நேரங்களில் கூட்டத்தின்போது, பறச்சி நீ எப்படி டி எங்களுக்கு சரிக்கு சமமாக நாற்காலியில் உட்கார முடியும். இந்த நாற்காலியில் உட்காருவதற்கு உனக்கு என்னடி தகுதி இருக்கு என்று

---

இழிவாகப் பேசுவார். அதுமட்டுமல்லாமல் வேட்டியை தூக்கி மடித்துக் கொண்டு ஆபாசமாக நின்று என்னிடத்தில் செய்கை செய்வது, கொலை மிரட்டல் விடுப்பது உள்ளிட்ட பல்வேறு வன்கொடுமைகளில் ஈடுபட்டு வந்தார். இதுவரை 6 கிராம சபை கூட்டமும் சுமார் 8 உறுப்பினர்கள் கூட்டமும் நடத்தியிருக்கிறோம்.

ஒவ்வொரு கூட்டத்திலும் செல்வம் என்னை தரக்குறைவாக பேசுவதும், மற்ற உறுப்பினர்கள் அவரை தடுத்து அமைதிபடுத்துவதும் உள்ளிட்ட சம்பவங்கள் வாடிக்கையாக நடந்து வருகின்றன. இதற்கு பயந்து கொண்டு நான் தலைவர் நாற்காலியில் கூட உட்காராமல் உறுப்பினர்கள் போன்று வரிசையில் உட்கார்ந்து கொள்வேன். பஞ்சாயத்து கூட்டங்களை துணைத் தலைவர் தலைமையிலேயே நடத்தப்படும். என்னிடம் மிரட்டி கையெழுத்துப் போடு என்று அதிகாரம் செய்வார்கள். நானும் வேறு வழியில்லாமல் கையெழுத்துப் போட்டுவிடுவேன். இதுமட்டுமல்லாமல் காசோலையில் கையெழுத்துப் போடுவதற்கு துணைத் தலைவர் பாலசுப்பிரமணியன் என்னிடம் பணம் கேட்டார். அதற்கு நான் மறுப்பு தெரிவிக்கவே, என்னடி நீ என்ன நேர்மையா ஆட்சி செய்கிறோம் என்று நினைப்பா, ஒழுங்கு மரியாதையாக வருகிற பணத்தில் எனக்கு உரிய பங்கை கொடு என்று மிரட்டுவார். ஒவ்வொரு முறையும் கையெழுத்து வாங்கும்போது அவரிடம் கெஞ்சி கும்பிட்டுதான் கையெழுத்து வாங்கி பஞ்சாயத்துப் பணிகளை செய்ய வேண்டியுள்ளது.

கடந்த 6.8.2012 அன்று பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அப்போது கிராம மக்கள் திரண்டு வந்து பஞ்சாயத்தில் சில இடங்களில் குடிநீர் வரவில்லை. அதற்கு உரிய நடவடிக்கை எடுங்கள் என்று கோரிக்கை வைத்தனர். அதற்கு துணைத் தலைவர் பாலசுப்பிரமணியனும், 6வது வார்டு உறுப்பினர் ராஜம்மாளின் மகன் செல்வமும் பொது மக்களை பார்த்து, எதற்கு எங்களிடம் குடிநீர் வரவில்லை என்று புகார் தெரிவிக்கிறீர்கள். நீங்களெல்லாம் சேர்ந்துதானே அவளை (ஜெயந்தி ஆகிய என்னை) தேர்ந்தெடுத்தீர்கள், அவள் மூத்திரத்தை வாங்கி குடியுங்கள் என்று ஆவேசமாக கத்தினர். அதற்கு சின்னப்பா (27) த/பெ.கோவிந்தன் என்கிற இளைஞர் இப்படியெல்லாம் ஆபாசமாகப் பேசாதீர்கள் என்று தட்டிக் கேட்டதற்காக துணைத் தலைவர் பாலசுப்பிரமணியன் செருப்பை கழட்டிக்கொண்டு சின்னப்பா என்கிற இளைஞரைத் தாக்க முயற்சித்தார். இதேபோன்று 5வது வார்டு உறுப்பினர் பவனம்மாள் என்பவரின் கணவர் வீரமணி என்பவரையும் துணைத் தலைவர் பாலசுப்பிரமணியன் செருப்பால் தாக்க முயற்சி செய்தார்.

சில நேரங்களில் என் வீட்டிற்கு வருகின்ற செல்வம், வீட்டிற்கு வெளியே நின்று கொண்டு ஆபாசமாக இழிவாகப்பேசி என்னைத் திட்டுவார். நீ என்னடி பெரிய ஜெயலலிதாவா, வீட்டுக்குள்ள இருக்கிற வெளிய வாடி என்றெல்லாம் பேசுவார். என் குழந்தைகளுக்கும் என் கணவருக்கும் உயிர் ரீதியான ஆபத்து ஏற்பட்டுவிடும் என்பதற்காக எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு வந்தேன்.

இந்நிலையில் கடந்த 15.8.2012 சுதந்திர தினத்தன்று காட்டாத்தி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் கொடியேற்றுவதற்காக சென்றேன். பள்ளிக் குழந்தைகளுக்கு மிட்டாய் வாங்குவதற்காக பள்ளிக்கூடம் அருகிலுள்ள கடைக்கு சென்றேன். அப்போது கடையில் பஞ்சாயத்து துணைத் தலைவர் பாலசுப்பிரமணியனும், ராஜம்மாள் மகன் செல்வமும், ரவி (எ) ராமசாமி (45) த/பெ. ஜெகநாதன் என்பவரிடம் என்னைப் பார்த்து கை நீட்டி ஏதோ சொல்லிக் கொண்டிருந்தனர். அப்போது ரவி (எ) ராமசாமி என்னை முறைத்தவாறே என் அருகில் வந்தார். நீ என்ன பெரிய மம்தாபேனர்ஜியாடி பறத் தேவிடியா, நீயெல்லாம் எப்படி டி கொடியேத்த வரலாம். தேசியக் கொடியை தொடுவதற்கு உனக்கு அருகதை இருக்காடி. புதுக்கோட்டை மாவட்டத்துல ஒரு பறச்சி கலெக்டரா உட்கார்ந்துருக்கா, நீ ஒரு பறச்சி, நீ பஞ்சாயத்துத் தலைவரா உட்கார்ந்து இருக்கிற, உங்களுக்கெல்லாம் எவ்வளவு திமிரு இருக்கும் என்று கூறியது மட்டுமல்லாமல் என்னை அருவருக்கத்தக்க வகையில் ஆபாசமாக இழிவாகப் பேசினார். பொது மக்கள் சிலர் அவரைத் தடுத்தனர். என் கணவர் என்னை சமாதானம் செய்து தேசிய கொடி ஏற்றுவதற்காக பள்ளிக்கூடத்திற்கு அழைத்து வந்தார்.

தாழ்த்தப்பட்ட இந்து ஆதிதிராவிடர் பறையர் சமூகத்தைச் சேர்ந்த நான் பஞ்சாயத்துத் தலைவராக இருப்பதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் கடந்த 10 மாத காலமாக மேற்குறிப்பிட்ட வன்கொடுமை கும்பல் என் மீது கொடூரமான சித்திரவதைகளையும் வன்கொடுமைகளையும் நடத்தி வருகின்றனர். சாதிய ரீதியாக அவர்கள் பெரும்பான்மை சமூகமாக இருப்பதனால் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆகவே கனம் சமூகம் அவர்கள் மேற்குறிப்பிட்ட வன்கொடுமை கும்பல் மீது தகுந்த நடவடிக்கை எடுத்து எனக்கும் என் குடும்பத்தினருக்கும் துப்பாக்கி ஏந்திய போலீசார் பாதுகாப்பு கொடுக்க உரிய நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்ட எனக்கு தகுந்த நீதி, நிவாரணம், மறுவாழ்வு கிடைக்க தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நாள்: 16.8.2012
இடம்: காட்டாத்தி

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
(ஜெயந்தி)

**ஆதாரம் – Evidence**

# ஹரியானா மாநிலத்தில் கிராம சபை உண்மை நிலையும் மற்றும் பரிந்துரைகள்

–பேராசிரியர் ரன்பீர் சிங்

நல்லஅரசாட்சிக்கு ஜனநாயகப் பரவலாக்கமே சிறந்த முறையாகும். அதனால் தான், இந்தியாவின் அப்போதைய பிரதமர், ராஜீவ் காந்தி மக்களவையில் (லோக் சபை) 1989ல், பஞ்சாயத்துராஜ்அமைப்புகளுக்கு அரசியல்சாசன அங்கீகாரம் அளித்து பலப்படுத்த 64வது திருத்த மசோதாவைக் கொண்டு வந்தார். மக்களவையில் நிறைவேற்றப்பட்டு இந்த மசோதா மாநிலங்களவையில் புறக்கணிக்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது. ராஜீவ் காந்தியின் இந்தத் தொலைநோக்குப் பார்வை, பின்னர் 1992ல் அப்போதைய பிரதமராக இருந்த P.V.நரசிம்மராவால் புரிந்து கொள்ளப்பட்டது. அவர் 1992ல் 72வது திருத்த மசோதாவிற்கு ஆதரவான சூழலை உருவாக்கியதால், 1993ல் 73வது அரசியல் சாசன சட்டத் திருத்தம் வந்தது. 1994ல் உறுதி செய்யப்பட்ட சட்டத்தால் பஞ்சாயத்து ராஜ் அமைப்பு முறை, பல மாநிலங்களால் நிறைவேற்றப்பட்டது.

அந்தந்த மாநிலச் சட்டங்களினால் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட, அரசியல் சாசன சட்டத்தின் 11வது அட்டவணையில் உள்ள 29 துறைகளின் மீதான அதிகாரங்களின்படி, பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நீதிக்கான திட்டங்களைத் தயாரித்து அமல்படுத்தும் வகையில் சுய அரசாங்கங்களாக அவை செயல்பட வேண்டும் என்பதற்காகவே 73வது அரசியல் சாசனச் சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டது. இருப்பினும், பரவலாக்கப்பட்ட கிராமப்புற அரசாங்கங்களான இவை ஹரியானா போன்ற மாநிலங்களில் தொடர்ந்து பலவீனமாகவே இருக்கின்றன.

ஏனென்றால், அவற்றின் அடித்தளமான கிராம சபை பலவீனமாக உள்ளது. கிராமப் பஞ்சாயத்து தயாரிக்கும் நிதி நிலை அறிக்கையை (பட்ஜெட்) பரிசீலிக்க, வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் நிகழ்வுகளை உருவாக்க, கடந்த நிதியாண்டோடு ஒப்பிட்டு பஞ்சாயத்தின் உண்மையான வரவு மற்றும் செலவில் பஞ்சாயத்தின் பொதுவான முன்னேற்றத்தை மறுபரிசீலனை செய்ய நடைமுறையில் உள்ள திட்டங்களை ஆய்வு செய்ய, திட்டங்கள் மற்றும் பிற வேலைகளுக்கான இடங்களைத் தேர்வு செய்ய, கிராம சபைக்கு ஹரியானா பஞ்சாயத்து ராஜ் சட்டம் அதிகாரம் அளித்திருந்தாலும் இவை ஏட்டளவிலேயே உள்ளன. உண்மை நிலவரப்படி கூட்டங்கள் நடைபெறவே இல்லை அல்லது இவை ஒரு சடங்கு என்பதைத் தவிர வேறு எதுவும் இல்லை. இவ்வாறு ஏன் நடந்தது என்றால், கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களும், உறுப்பினர்களும் கிராமசபையை எதிர் கொள்ள விரும்பவில்லை. அவர்களின் செயல்பாட்டின் சமூகத் தணிக்கையை அவர்கள் விரும்பவில்லை. மேலும் கிராமசபை உறுப்பினர்களும் இந்தக் கூட்டங்களில் கலந்து கொள்ள மறுத்தனர். அவர்கள் இது ஒரு வீணான பயனில்லாத செயல் என்று நினைத்தனர்.

K.K.மோர் என்பவர் நடத்திய ஆய்வில் (பரவலாக்கம் ஜனநாயகம் மற்றும் நல்ல அரசாட்சி: கிராமசபையின் திறன் வளர்ப்பு ஹரியானா மாநிலத்திலிருந்து கள ஆய்வுகள்), அடித்தட்டு அரசாங்கம் என்ற இதழ், எண்.viii, எண்.1&2, ஜூன் – டிசம்பர் 2010 (பக்கம் 110 – 115) மேல்குறிப்பிட்ட தகவல்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

2008ம் ஆண்டு ஜனவரி மாதம் 25ம் தேதி, ஹரியானா மாநில நிர்வாக சீர்திருத்த ஆணையம், பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளின் செயல்பாடு மற்றும் நிதி நிலை அதிகாரத்துவத்திற்காக ஒரு குழுவை அமைத்தது. அந்தக் குழு அளித்த பரிந்துரைகளை முழுமையாக கூர்ந்து ஆராய்ந்த பிறகு, ஆணையம் தனது அறிக்கையை 2011, ஜனவரி 11 அன்று அளித்தது. அந்த அறிக்கையில் கிராம சபை, கிராமப் பஞ்சாயத்து, பஞ்சாயத்து சமிதி, மாவட்ட பஞ்சாயத்து ஆகிய அமைப்புகளை பலப்படுத்துவதற்கான வலுவான வழிகளை பரிந்துரைத்தது. பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்கு நிதி, நிர்வாகம் மற்றும் பணியாளர்களை வழங்குவது மற்றும் அவைகளின் திறன் வளர்ச்சிக்கும் சில பயனுள்ள ஆலோசனைகளையும் ஆணையம் வழங்கியது.

### கிராமசபையை வலுப்படுத்துவதற்காக ஆணையம் வழங்கிய ஆலோசனைகள்:

1. வருடாந்திர செயல் திட்டத்தில் கிராம சபையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்கள் / வேலைகளை மட்டுமே எடுத்துச் செய்வதற்கு கிராமப் பஞ்சாயத்திற்கு அனுமதி அளிக்கப்பட வேண்டும்.

2. கிராம சபையின் பொதுக் கூட்டத்திற்கு மக்கள் பங்கேற்பை உறுதிப்படுத்த பத்தில் ஒரு பாகம் என்ற கூட்ட வரம்பை புதுப்பிக்க வேண்டும். (பத்தில் ஒருவர்) ஆனால் ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்திற்கு எந்த வரம்பும் இருக்கக்கூடாது.

3. பல வகையான ஒய்வூதியத் திட்டம் BPL/IAY மற்றும் 100 சதுர யார்டுகள் மனைகள் (பிளாட்டுகள்) உள்ளிட்ட பிற திட்டப் பயனாளிகள் பட்டியல், கிராம சபையால் இறுதி செய்யப்பட வேண்டும். அந்த கிராம சபையில் குறைந்தது மொத்த கிராமசபை உறுப்பினர்களில் பத்தில் ஒரு பாகத்தினராவது கலந்து கொண்டிருக்க வேண்டும்.

4. கிராமப் பஞ்சாயத்திற்கான வரவு செலவுப் பட்டியல் (பட்ஜெட்) கிராம சபையால் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும். அவர்களுக்குள் வேறுபாடு வந்தால், அது பஞ்சாயத்து சமிதிக்கு (ஒன்றியம்) பரிந்துரைக்கப்படும். சமிதியின் முடிவே இறுதியானதாக இருக்கும்.

5. கிராமப் பஞ்சாயத்தின் செயல்பாடுகள் பற்றிய சமூகத் தணிக்கையை கிராமசபை செய்ய வேண்டும். ஒய்வு பெற்ற அரசாங்க ஊழியர் / இராணுவ வீரர் படித்த பெண்கள் குழு, நேரு யுவ கேந்திரா மற்றும் சுய உதவிக் குழுவிலிருந்து தலா ஒரு பிரதிநிதி, பஞ்சாயத்து சமிதி மற்றும் மாவட்ட பஞ்சாயத்து உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்ட கிராம சபையால் தேர்வு செய்யப்பட்ட சமூகத் தணிக்கைக் குழு, கிராம சபைக்கு சமூகத் தணிக்கை செய்ய உதவி செய்யும்.

6. 5000த்துக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட கிராமப் பஞ்சாயத்து மற்றும் 2 கிராமங்களுக்கு மேல் உள்ள கிராமப் பஞ்சாயத்தில் வார்டு சபை அமைக்கப்பட வேண்டும். வார்டு சபைக் கூட்டம் அந்த வார்டு உறுப்பினர் தலைமையில் நடத்தப்பட வேண்டும். அது கிராம சபைக் கூட்டத்திற்கு முன்னர் நடத்தப்பட வேண்டும். வார்டு சபையில் பரிந்துரைகளை கிராம சபை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

7. கிராம சபைக்கூட்ட நடைமுறைகள் (வீடியோ) ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

8. 73வது திருத்தச் சட்டத்தின்படி, இந்தக் கூட்டங்களை நடத்துவதற்கு செயல் அலுவலர் (வட்டார வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து அலுவலர்) பொறுப்பாக்கப்பட வேண்டும்.

9. வட்டார வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து அலுவலர் (BPDO) மற்றும் தொடர்புடைய வெவ்வேறு துறை அலுவலர்களும் இந்தக் கூட்டங்களில் கலந்து கொள்வதை உறுதிப்படுத்த கிராம சபைக் கூட்டங்களை நடத்துவதற்கான சரியான தேதியை நிர்ணயிப்பதற்குப் பதிலாக, இந்தக் கூட்டங்களை நடத்துவதற்கு இரண்டு மாத அவகாசம் கொடுக்கப்பட வேண்டும்.

10. BPDO (செயல் அலுவலர்) நடத்தும் கிராம சபைக் கூட்டங்களை பரிசீலிக்கும் வகையில், ஹரியானா பஞ்சாயத்து ராஜ்சட்டம் 1994ல் சட்டப்பிரிவு ஏற்படுத்தப்பட வேண்டும். BPDO, கிராம சபை குறித்த காலாண்டு அறிக்கையை பஞ்சாயத்து சமிதி மற்றும் மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவருக்கு அனுப்ப வேண்டும்.

11. அதிக உறுப்பினர்களோடு கிராம சபைக் கூட்டங்களை நடத்தும் பஞ்சாயத்துகளுக்கு ஊக்கத்தொகை அளிக்கப்பட வேண்டும். 50 சதவீத வருகையை உறுதிப்படுத்துபவர்களுக்கு சிறப்பு நிதி அளிக்கப்பட வேண்டும்.

12. ஆனால், ஒராண்டுக்கும் மேலாக காலம் கடந்துவிட்ட பிறகும், பஞ்சாயத்து ராஜ்அமைப்புகளின் நிதி மேம்பாட்டிற்கு, சில நடவடிக்கைகள் எடுத்தல், தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகள், அலுவலக ஊழியர்களுக்கு மதிப்பூதியம் மற்றும் பிற சலுகையை அதிகப்படுத்துதல் ஆகியவை தவிர ஹரியானா மாநில அரசாங்கம், பஞ்சாயத்து ராஜின் அடிப்படையான கிராம சபையை வலுப்படுத்த எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பங்கேற்பு ஜனநாயக அமைப்பான கிராமசபையின் மூலமே நல்ல அரசாங்கம் என்பது உறுதிப்படுத்தப்படும் என்பதால் மேற்குறிப்பிட்ட நடவடிக்கை அவசரத் தேவையாகும். எனவே, மாநில அரசு, ஹரியானா நிர்வாக சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரைகளை கவனமாக பரிசீலிக்க வேண்டும். அவற்றை அமல்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

**ஆதாரம்: பஞ்சாயத்து ராஜ், Vol.XIX, MAY 2012, No.5**

# சுதந்திரமாக செயல்பட முடியாத ஆதிதிராவிட ஊராட்சி தலைவர்கள்

சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றில், பெரும்பாலான ஆதிதிராவிட ஊராட்சித் தலைவர்கள், சுதந்திரமாக செயல்பட முடியாத நிலையில் உள்ளனர் என்பது தெரிய வந்துள்ளது. உள்ளாட்சித் தேர்தலில், ஆதிதிராவிடர்களுக்கு, 26 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

தமிழகத்தில் உள்ள மொத்த ஊராட்சித் தலைவர்களின் எண்ணிக்கை, 12,524. இவற்றில், 3,136 (25 சதவீதம்) ஆதிதிராவிடர்களுக்கு, 156 (1 சதவீதம்), பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டன. இதேபோல், தமிழகத்தில் 99,333 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்களுக்கான இடங்கள் உள்ளன. இவற்றில், 25,360 இடங்கள் ஆதிதிராவிடர்களுக்கும்; 1,039 இடங்கள் பழங்குடியினருக்கும் வழங்கப்பட்டன. இதுதவிர, 31 மாவட்ட ஊராட்சி தலைவருக்கான இடங்கள் உள்ளன. இவற்றில், ஆதிதிராவிடர்களுக்கு, 7 இடங்கள் ஒதுக்கப்பட்டன.

## கள ஆய்வு

மதுரையில் இயங்கும், ‘சாட்சியம்’ அமைப்பு சமீபத்தில் மதுரை, சிவகங்கை, திண்டுக்கல், தேனி, கோயம்புத்தூர், ஈரோடு, விழுப்புரம், கடலூர், நாகப்பட்டிணம், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள 171 ஊராட்சிகளில், உள்ளாட்சி அமைப்புகளில் தலைவராக உள்ள ஆதிதிராவிடர்கள் குறித்து ஆய்வு செய்தது. இதில், அனைத்து தலைவர்களும் தங்கள் மீது சாதிய பாகுபாடு கடைபிடிக்கப்படுகிறது என ஒப்புக் கொண்டுள்ளனர். அதுமட்டுமன்றி, பல்வேறு விதமான கொடுமைகள் அவர்கள் மீது நடத்தப்பட்டதாக தெரிவித்துள்ளனர்.

- உளுந்தூர்பேட்டை வட்டம், திருநாவலூர் ஒன்றியத்துக்கு உட்பட ஊராட்சி மன்றத் தலைவர் அறிவுக்கரசு, ‘குடியரசு தினத்தன்று, என்னை கொடியேற்ற விடாமல் தடுத்தனர்’ என புகார் தெரிவித்துள்ளார்.
- திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள புளியூர் நத்தம் ஊராட்சிமன்றத் தலைவர் சண்முக சுந்தரம், ‘ஊராட்சி அலுவலகத்திற்கு செல்லவிடாமல் தடுத்து வருகின்றனர்’ எனத் தெரிவித்துள்ளார்.
- டி.கல்லுப்பட்டி, கொட்டானிப்பட்டி ஊராட்சித் தலைவர் ஜனகர், ஊராட்சி எழுத்தர், பதிவேடுகளை என்னிடம் கொடுக்க மறுக்கிறார் என மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளித்தேன். ஆனால், இன்று வரை, அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

## பயிற்சி அவசியம்

ஊராட்சித் தலைவர்களுக்கு நிர்வாகம், பொருளாதார மேம்பாடு, சமூக நிதி, உள்ளிட்ட திறன் வளர்ப்பு பயிற்சியை அரசு கொடுக்க வேண்டும். ஆனால், ஊராட்சி மன்ற தேர்தல் முடிந்து ஓராண்டு கடந்த நிலையில், 94 சதவீத ஊராட்சித் தலைவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படாமல் இருப்பது தவறு; இதை சரி செய்ய வேண்டும்.

மேலும், ஊராட்சித் தலைவர்கள் மீது நடைபெறும் சாதியப் பாகுபாடு, மன ரீதியான துன்புறுத்தல்கள் குறித்து அறிந்து, அவற்றுக்கு தீர்வுகாண, மூன்று மாதத்திற்கு ஒரு முறை, தலித் ஊராட்சித் தலைவர்கள் மட்டுமே பங்கேற்கக் கூடிய குறைகேட்பு கூட்டத்தை, ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்த வேண்டும் என சாட்சியம் அமைப்பின் தலைவர் கதிர் கூறினார்.

**ஆதாரம்: தினமலர், 13.8.2012**

*For Private Circulation Only*

# உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு அடையாள அட்டை:

## அரசு அதிரடி

தமிழகம் முழுவதும், உள்ளாட்சிப் பிரதிநிகளுக்கு, புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கும் பணி நடந்து வருகிறது. தமிழகத்தில் பத்து மாநகராட்சி, 125 நகராட்சி, 559 பேரூராட்சி, 385 யூனியன், 12 ஆயிரத்து, 618 கிராம பஞ்சாயத்துகள் உள்ளன. இதில், ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட உள்ளாட்சி பதவிகளில், 40 ஆயிரத்து, 75 பேர் பெண்களாக உள்ளனர்.

### ஆண்கள் ஆதிக்கம்

பெண்கள் மக்கள் பிரதிநிதிகளாக உள்ள இடங்களில், நிர்வாகப் பணிகளை, அவரது கணவர் அல்லது குடும்பத்தினர் உதவியுடன் செயல்படுத்தும் நிலை உள்ளது. நகராட்சி, ஒன்றியம் மற்றும் கிராம ஊராட்சிக் கூட்டங்களில், பெண் பிரதிநிதிகள் பெரும்பாலும் பேசுவதில்லை.

மேலும், சம்பந்தப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் நகராட்சி நிர்வாக அலுவலர்களும், பெண் உள்ளாட்சிப் பிரதிநிதிகளை கலந்து ஆலோசிக்காமல், அவரது கணவர் அல்லது குடும்பத்தினரைக் கலந்து ஆலோசனை செய்து முடிவெடுக்கின்றனர்.

ஒன்றியம் மற்றும் நகராட்சிக் கவுன்சில் கூட்டங்களில், பெண் பிரதிநிதிகளின் கணவர் உள்ளிட்டோர் கலந்து கொள்வதால், பல்வேறு பிரச்சனைகள் எழுந்தன. குடும்ப உறுப்பினர்களின் ஆதிக்கம் குறித்து, தமிழக அரசுக்குப் புகார் சென்றது.

அதையடுத்து 'உள்ளாட்சி அமைப்புக் கூட்டங்களில் பெண் பிரதிநிதிகளுக்கு பதிலாக கணவர், உறவினர்களை அனுமதிக்கக் கூடாது. விதிமுறைகளை பின்பற்றாத ஊரக வளர்ச்சி மற்றும் நகராட்சி அலுவலர்கள் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்' என, தமிழக அரசு உத்தரவிட்டது.

### அரசு உத்தரவு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், தமிழகத்தில் உள்ள 385 ஒன்றியங்களுக்குட்பட்ட கிராம ஊராட்சித் தலைவர், வார்டு உறுப்பினர், ஒன்றிய கவுன்சிலர், மாவட்டக் கவுன்சிலர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளுக்கு, புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கும்படி, தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளுக்கு, அடையாள அட்டை வழங்கும்போது, அவர்கள் மட்டுமே உள்ளாட்சி அமைப்புக் கூட்டங்களில் அனுமதிக்கப்பட வேண்டும் என, அரசு அறிவுறுத்தியுள்ளது.

இந்த அடையாள அட்டையில், 'உள்ளாட்சி பிரதிநிதி பெயர், ஊராட்சி, வார்டு எண், ஊராட்சி ஒன்றியம், மாவட்டம், பிறந்த தேதி, ரத்த வகை, வீட்டு முகவரி' போன்ற முழு விவரங்கள் உள்ளன. உள்ளாட்சி பிரதிநிதி அடையாள அட்டை, வரும் 2016ம் ஆண்டு வரை செல்லத்தக்கது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆதாரம்: தினமலர் 22.7.2012**

வெளியீடு

**மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (HRF)**

எண்.10, எல்.டி.ஜி. ரோடு, சின்னமலை, சைதாப்பேட்டை, சென்னை – 600 015. இந்தியா
தொ.பே.044–22353503, தொ.நகல். 22355905, மின் அஞ்சல் : humanrightsadvocacyandresearch@gmail.com
இணையதளம் : www.humanrightsadvocacyandresearchfoundation.org